# வரவு-செலவுத் திட்டம்



3418 2



கழக
வெளியீடு

# வரவு–செலவுத் திட்டம்

(BUDGET)

★

ஆசிரியர் :

மா பா குருசாமி, எம்ஏ, டி ஜி டி,

★

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.
1976

© மாரியப்பன் (பாறைப்பட்டு) குருசாமி (1936)

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD

கிளைகள் :

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
கும்பகோணம்-1 திருச்சிராப்பள்ளி-2

கழக வெளியீடு : ௧௧௦௭

முதற்பதிப்பு: ஆகஸ்ட்டு 1976

X71
N76

VARAVU - SELAVUTH THITTAM

(BUDGET)

அப்பர் அச்சகம், சென்னை-600 001. (I/2)

## பதிப்புரை

இன்னின்ன செயல்களை இன்னின்னபடி செய்தல் வேண்டும் என முறை அறிந்து - வகை அறிந்து செய்தலே திட்டமிட்ட செயல்களாகும்.

இத் திட்டங்கள், அரசியல் திட்டம், குடும்ப நலத் திட்டம், கல்வித் திட்டம், பொருளியல் திட்டம், வரவு - செலவுத் திட்டம், 20 அம்சத் திட்டம் எனப் பலவகைப்படும். இவற்றுள், வரவு - செலவுத் திட்டமே அனைத்துத் திட்டங்களுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது.

ஈண்டு வரவு - செலவுத் திட்டம் என்பது அரசின் வரவு - செலவுத் திட்டத்தையே குறிப்பதாகும். ஒவ்வோர் ஆண்டும் அரசு வெளியிடும் வரவு - செலவுத் திட்டத்தினைப் பொறுத்தே மக்களின் வாழ்வியல் அமைகின்றது.

அரசு தனது வரவு - செலவுத் திட்டத்தினைச் சித்தப்படுத்துவதற்குமுன் முந்திய ஆண்டின் நிலையினையும், அடுத்து வரவிருக்கும் ஆண்டின் நிலையினையும் கருத்தில் கொண்டே திட்டமிடல் வேண்டும்.

இவை பற்றியெல்லாம் பொதுமக்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் தெளிவுபடக் கூறி விளங்க வைக்கும் முறையில் ''வரவு - செலவுத் திட்டம்'' என்னும் இந்நூலினை இயற்றித் தந்த இந் நூலாசிரியர்க்குக் கழகத்தின் நன்றி என்றும் உரியது.

இது நூலகங்கள்தோறும் இருந்து எல்லார்க்கும் பயன்பட வேண்டிய பயனுள்ள நூலாகும் என்பதில் ஐயமில்லை.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# முன்னுரை

நாம் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு நிலையில் நம்முடைய வரவுகளையும் செலவுகளையும் பற்றி எண்ணிப் பார்க்கின்றோம். நமது வருவாய்கள் அளவின்றி வந்து கொண்டிருந்தால் நாம் செலவுகளைப் பற்றிக் கவலைப்படாமல், கணக்குப் பார்க்காமல் இருக்கலாம். ஆனால், நம்முடைய வரவுகள் வரையறுக்கப் பட்டிருக்கின்றன. ஆதலால், செலவுகளைப் பற்றி எண்ணிப் பார்ப்பதும், வரவு - செலவுத் திட்டம் தீட்டுவதும் தேவையாகின்றது.

தனி மனிதர்களைவிட மிகுதியாக நிறுவனங்களும் அரசும் அறிவியலடிப்படையில் வரவு - செலவுகளைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டியதிருக்கின்றது. எவை சிறப்பாக வரவு - செலவுத் திட்டம் தீட்டிச் செயல்படுகின்றனவோ அவை நன்றாக முன்னேறுவதைக் காண்கின்றோம்.

இன்றையப் பொருளாதார அமைப்பு முறைகளையும், நடவடிக்கைகளையும், அவற்றில் அரசின் செல்வாக்கையும் அறிந்துகொள்ள அரசின் வரவு – செலவுத் திட்டத்தை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். மக்களாட்சியின் வெற்றிக்கும், மக்கள் அரசோடு ஒத்துழைப்பதற்கும் அரசின் வரவு-செலவைப் பற்றிய அறிவு எல்லார்க்கும் தேவையாக இருக்கின்றது. இந்தத் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்தில்தான் இந்த ''வரவு-செலவுத் திட்டம்'' என்னும் நூலை எழுதியிருக்கின்றேன்.

இந்த நூல் விரிவாக, வரவு – செலவுத் திட்டம் பற்றிப் பொதுவாகவும், நடுவண் அரசு, மாநில அரசின் வரவு – செலவுத் திட்டங்கள் பற்றிக் குறிப்பாகவும் விளக்குகின்றது. பொருளியல் பயிலும் மாணவர்களுக்கும், வணிகர்களுக்கும், தொழில் நடத்துபவர்களுக்கும், பொதுமக்களுக்கும் பயன்படும் வகையில் நூலைப் பகுத்தும், தொகுத்தும் உருவாக்கியிருக்கின்றேன்.

1976 ஆம் ஆண்டு வரையுள்ள நடுவண மாநில அரசுகளின் வரவு - செலவுத் திட்டங்களைப் பற்றிய விளக்கக் குறிப்புகள் நூலில் உள்ளன. அரசின் வரவு - செலவுத் திட்டங்கள் ஓராண்டு காலத்திற்காகத் தீட்டப்படுவன. அவை நிலையாக இருப்பதில்லை. ஆண்டுதோறும் சூழ்நிலைக்கேற்ப அவற்றின் கூறுபாடுகளில் மாற்றம் ஏற்படும். அவற்றையும் விளங்கிக் கொள்ள வழிவகுக்கும் வகையில் இந்த நூல் அமைந்துள்ளது.

பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் நல்ல பொருளியல் நூல்களை எழுத வாய்ப்பளித்துக் கொண்டிருக்கும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கும், அதன் ஆட்சியாளர் வணக்கத்திற்குரிய உயர்திரு. வ. சுப்பையா அவர்களுக்கும் என்னுடைய மனங்கனிந்த நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

மா. பா. குருசாமி.

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வரலாற்றுப் பின்புலம் | 1 |
| 2. | பலவகை வரவு-செலவுத் திட்டங்கள் | 9 |
| 3. | இந்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படை | 27 |
| 4. | இந்திய அரசின் வரவு-செலவுத் திட்டமுறை | 39 |
| 5. | தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டம் | 58 |
| 6. | அரசின் வரவுகளும் செலவுகளும் அவற்றின் விளைவுகளும் | 69 |
| 7. | பற்றுக்குறை நிதியாக்கம் | 77 |
| 8. | பிற நாடுகளின் வரவு-செலவுத் திட்டம் | 85 |
| 9. | வரவு-செலவுத் திட்டமும் வளர்ச்சியும் | 91 |

G-CCT1...

# வரவு-செலவுத் திட்டம்

## 1. வரலாற்றுப் பின்புலம்

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி - மார்ச்சுத்திங்களில் மக்களெல்லாம் அரசின் வரவு-செலவுத் திட்டம்பற்றிப் பேசுவதைக் கேட்கின்றோம். இந்திய நடுவணரசு நாடாளு மன்றத்திலும், மாநில அரசுகள் சட்டமன்றங்களிலும் தங்களுடைய வரவு செலவுத் திட்டங்களை வெளியிடுகின்றன. அரசின் வரவு - செலவுத் திட்டத்திற்கும் நாட்டு மக்களின் வாழ்விற்கும் வளத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. ஆதலால், அதனைப் பற்றி எல்லோரும் தெரிந்து கொள்வது முதன்மையாகும்.

**அரசின் வரவும் செலவும் :** நாம் நன்ருக வாழ்வதற்குப் பொருள் தேவைப்படுகின்றது. ஒவ்வொருவருக்கும் சில வழிமுறைகளில் வருவாய் கிடைக்கின்றது. நாம் பெற்ற வருவாயைத் தக்க முறையில் செலவிட்டு வாழ்கின்ருேம். நாம் எப்படி **வருவாய்களைப் பெற்றுச் செலவும்** செய்கின்ருேமோ அப்படி அரசுக்கும் நாட்டு மக்களின் வாழ்க்கையைக் கட்டிக் காக்கும் பணியில் ஈடுபட்ட வருவாய்களும் செலவுகளும் உள்ளன.

அரசுக்கு வருவாய்கள் பல வழிகளில் கிடைக்கின்றன. அரசு பலவற்றிற்காகப் பணத்தைச் செலவிட வேண்டிய திருக்கின்றது. எப்படி அரசு வருவாய் பெற்று, எந்த வகைகளில் செலவிடுகின்றதென்பதைப் "பொது நிதி" (Public Finance) என்ற தனி இயலில் ஆராய்கின்றார்கள். பொது நிதியின் ஒரு பகுதியாகவே அரசின் வரவு - செலவுத் திட்டம் (Budjet) அமைகின்றது.

**மன்னராட்சிக் காலம்:** இன்றைய மக்களாட்சி முறையில் ஒரு நாட்டின் வரவுகளையும்—செலவுகளையும் திட்டமிட்டு, மக்களின் ஒப்புதல் பெற்றுச் செலவிட வேண்டியதாயிருக்கின்றது. மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இத்தகைய தேவை இருக்கவில்லை.

அரசர்களின் ஆட்சிக் காலத்திலும் அரசு செவ்வனே செயல்பட வேண்டுமானால் நாட்டின் வருவாய்களைப்பற்றியும் செலவுகளைப்பற்றியும் ஒரு தெளிவான கண்ணோட்டம் தேவையாக இருந்தது. அரசுக்கு எவ்வளவு வருமானம் வருகின்றதென்று தெரியாமல் அரசன் வாரி வழங்கிக் கொண்டிருக்க இயலாது. வருவாயை ஒட்டிச் செலவுகளை அமைத்துக் கொள்வதும், செலவுகள் பெருகுகின்றபொழுது, செலவுகளுக்கேற்ப வருவாய்களை மிகுதிப்படுத்துவதும் அரசின் பொறுப்பாக இருந்தது.

**அரசின் பணிகள்:** ஒரு நாட்டில் நடைபெறுவது மன்னராட்சியாக இருந்தாலும், மக்களாட்சியாக இருந்தாலும் அரசு சில பணிகளைக் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டும். நாட்டின் பாதுகாப்பைக் கவனிக்க வேண்டும். உள் நாட்டில் அமைதி நிலவ ஆவன செய்ய

வேண்டும். சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதைப் போன்றே மக்களுக்கிடையில் தோன்றுகின்ற சிக்கல் களைத் தீர்த்துவைக்க வேண்டும். இவை தவிர எந்த அளவிற்கு மக்களின் நலனைக் கட்டிக் காத்து வளர்க் கின்றார்களோ அந்த அளவிற்கு அரசிடம் மக்கள் நம்பிக்கை கொண்டிருப்பார்கள்.

அரசு தன்னுடைய பணிகளைத் திறமையாகச் செய்யப் பணம் வேண்டும். அரசின் பணிகள் மிகுகின்ற பொழுது அரசிற்குத் தேவையான பணத்தின் அளவும் கூடும். இந்த வரவுகளையும் செலவுகளையும் திறமையாக நிர்வகிக்கின்ற அரசு சிறப்பாக நடைபெறும்.

**வள்ளுவர் வாய்மொழி :** உலகியல் நடைமுறைகளை நுண்ணிய முறையில் அருமையாகக் கூறி வான்புகழ் கொண்டவர் தெய்வப்புலவரான திருவள்ளுவர். அவர் நாடும் அரசும் எப்படி அமைய வேண்டுமென்பதை முறைப்படுத்திக் கூறியிருக்கின்றார். ஆட்சியின் சிறப்பு பொருளின் நிர்வாகத்தில் இருப்பதனை எடுத்துரைத் திருக்கின்ற பெருமை எண்ணி மகிழக் கூடியதாகும்.

அரசின் பொருள் (நிதி) தொடர்பான பணிகளை வள்ளுவர் நான்காக வகுத்துக் கூறுகின்றார். அந்த நான்கு பணிகளை உள்ளடக்கியதாக, அவற்றினைத் தொகுத்துக் கூறுவதாக இன்றைய வரவு செலவுத் திட்டம் விளங்குகின்றது. ஆதலால் வள்ளுவரின் வாய்மொழிப்படி அரசின் பொருள்பற்றிய பணிகளை அறிந்து கொள்வது வரவு - செலவுத் திட்டத்தை விளங்கிக் கொள்ளத் துணைசெய்யும்.

வள்ளுவரின் கருத்துப்படி, அரசின் (மன்னனின்) முதல்பணி பொருள் வருகின்ற வழிமுறைகளைப்

பெருக்கிக் கொள்ள வேண்டும். கிணற்றில் தண்ணீர் இருந்தால்தான் நீர் இறைக்க முடியும். அரசுக்கு வருவாய் வருகின்ற துறைகள் இருக்க வேண்டும். இத்தகைய பொருள் தரும் துறைகள் இருவகைகளில் அமையலாம். ஒன்று, அரசுக்குரிய சொத்துகளி லிருந்தும், வாணிபம்-தொழில் அமைப்புகளிலிருந்தும் நேரடியாகப் பணம் வரலாம். மற்றொன்று மக்களிடம் வாங்குகின்ற வரிகள், தீர்வைகள் போன்றவற்றாலும் வருமானம் கிடைக்கலாம். ஆற்றலுள்ள ஆட்சியாளன் வருவாய் வழங்கத் தக்க புதிய புதிய வழிகளைக் காண வேண்டும்.

அரசின் இரண்டாவது தலையாய பணி, வருவாய் வரக் கூடியவற்றிலிருந்து முறைப்படி பொருளைச் சேர்ப்பதாகும். சிறுதுளி பெரு வெள்ளமாதல் போல, மக்களிடம் சிறிய அளவில் வாங்குகின்ற பணத்தைப் பெரிய தொகையாக்க வேண்டும். வருவாயை ஈட்ட ஏற்ற அமைப்புகளை உருவாக்க வேண்டும். சரியான அமைப்புமுறை இல்லாவிட்டால், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போல, அரசின் கீழ்நிலை அலுவலர்கள் வாங்கும் வரிப்பணம் கருவூலத்திற்கு வந்து சேராமல் போகலாம். இத்தகைய குறைபாடு நடைமுறையில் தோன்றிவிட்டால் அரசுக்கு வருவாய் வரும் வாய்ப்புகள் பெருகினாலும் தேவை யான அளவு வருவாய் கிடைக்காமல் போகும். ஆதலால், அரசு பொருளை ஈட்டுவதில் திறமையாகச் செயல்பட வேண்டும்.

மூன்றாவதாக, இப்படி ஈட்டுகின்ற பொருளைக் கட்டிக் காக்கவேண்டும். அரசு வருவாய் பெறுவது


நிலையாகச் சேர்த்து வைப்பதற்காக அன்று. பெற்ற வருவாயைச் சரியான வகையில் செலவிட வேண்டும், அப்படிச் செலவாகின்றவரை ஈட்டிய பொருளைக் கட்டிக் காப்பது அரசின் கடமையாகும்.

நான்காவதாக, பல வழிமுறைகளில் சேர்த்து வைத்த பொருளைப் பல வழிகளில் செலவிட வேண்டும். வருவாயின் அளவை ஒட்டி, செலவிட வேண்டிய துறைகளையும், செலவின் கணக்கையும் கணித்து, திறமையாகச் செலவிட வேண்டும். இப்படித் தொகுத்த வருவாயை வகுத்துச் செலவிடுவதிலும் வல்லமை பெற்ற அரசே சிறந்ததாக விளங்கும்.

வள்ளுவர் தாம் கருதிய அரசின் பொருள் தொடர்பான நான்கு தலையாய பணிகளையும் செறிந்த சுருங்கிய முறையில்,

> **"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்ல தரசு"**

என்று கூறுகின்றார். அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் இந்த நான்கு பணிகளும் எப்படி அடங்குகின்றனவென்பதைக் கீழ்க்கண்டவாறு கூறலாம்:—



**வரவு - செலவுத் திட்டம்:** முடியாட்சிக் காலத்தில் தற்காலத்தைப்போல வரவு-செலவுத் திட்டம் போடுவ தில்லை. ஆனால், மன்னரும் அமைச்சர்களும் நாட்டின் மொத்த வருவாய்க்கும் செலவுக்கும் உள்ள தொடர்பை அறிந்திருந்தனர். ஆதலால், எழுத்து வடிவில் வரவு - செலவுத் திட்டம் இல்லாவிட்டாலும் எண்ணத்தில் வரவு - செலவுக் கண்ணோட்டம் இருந்தது.

மன்னர்கள் சிலவகை வருவாயைப் பெறுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். அரசர்கள் பல வகையான வரிகளை முறைப்படுத்திப் பெற்றதை வரலாறு கூறுகின்றது. சிறந்த மன்னர்கள் மரபுவழிச் செலவுகள் போக எஞ்சிய வருவாயைச் சேர்த்து அரிய பொதுநலப் பணிகளைச் செய்து அழியாப் புகழ் பெற்றனர். சான்றாக, தமிழ் மன்னர்களில் காவேரிக்குக் கல்லணை கட்டி வேளாண்மை வளத்தைப் பெருக்கிய கரிகால் சோழனையும், தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிக் கலை வளத்தை நிலைநாட்டிய இராசராச சோழனையும் குறிப்பிட்டுக் கூறலாம். இத்தகைய பணிகள் அரசர்களின் வருவாய், செலவைவிட மிகுந்திருந்ததைக் காட்டுகின்றன.

மன்னராட்சி முறை மாறி ஏதோ ஒரு வகையில் மக்களாட்சி முறை மலர்ந்த பொழுது நாட்டின் மொத்த வரவு - செலவுகளைத் திட்டமிட வேண்டிய தேவை ஏற்பட்டது. இங்கிலாந்தில் மன்னராட்சி முறையை மேல்மட்டத்தில் பெயரளவில் வைத்துக் கொண்டு நடைமுறையில் மக்களாட்சி முறையை "நாடாளுமன்ற" (Parliament) அமைப்பின்மூலம் கொண்டு வந்தனர். நாட்டின் வரவு - செலவுகளைப்

பற்றி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அறிவிக்கவும், அவர்களின் ஒப்புதல் பெற்றுப் புதிய வரிகளை வாங்கவும், புதிய செலவுகளை மேற்கொள்ளவும் வரவு - செலவுத் திட்டம் தீட்டும் பழக்கம் காலப்போக்கில் ஏற்பட்டது.

இப்பொழுது மக்களாட்சி முறையின் உயிர் நாடியாக அரசின் வரவு - செலவுத் திட்டம் திகழ்கின்றது. அரசின் வரவு - செலவுத் திட்டத்திலிருந்து அரசு பின்பற்றும் பொருளாதாரக் கொள்கையைத் தெரிந்து கொள்ளலாம். நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை வரவு - செலவுத் திட்டத்தின்மூலம் அரசினால் நெறிப்படுத்த முடிகின்றது. மொத்தத்தில் இன்று அரசின் பொருளாதாரப் பணிகளை வெளிக் காட்டும் கண்ணாடியாக வரவு - செலவுத் திட்டம் விளங்குகின்றது.

**காலமும் கணக்கும் :** ஒரு நாட்டின் - அரசின் - பொருளாதார வாழ்க்கை தொடர் சங்கிலியைப்போல அமைந்திருக்கின்றது. தலைமுறை தலைமுறையாகச் சில பொருளாதாரப் பணிகள் தொடர்கின்றன. இருந்தாலும் அரசு பண (நிதி) நிலைபற்றிய தெளிவான கணக்கைக் காட்டுவதற்காகக் காலக் கணக்கைப் பின்பற்றுகின்றது.

பொதுவாக, ஓராண்டிற்கான வரவு-செலவுகளைக் கணக்கிடுகின்றனர். வரவு - செலவுத் திட்டத்தில் முந்திய ஆண்டின் வரவு-செலவுகளின் அடிப்படையில் வரப் போகின்ற ஆண்டிற்கான வரவு - செலவுகளை மதிப்பிடுகின்றனர். நமது நாட்டில் அரசின் நிதியாண்டு

ஏப்பிரல் திங்களில் தொடங்கி மார்ச்சுத் திங்களில் நிறைவு பெறுகின்றது.

வரவு - செலவுத் திட்டத்தைப்பற்றிப் பொது வாகவும் நமது நடுவண அரசு, மாநில அரசு ஆகிய வற்றின் வரவு - செலவுத் திட்டங்களைப்பற்றிக் குறிப் பாகவும், சிறப்பாகவும் நாம் அறிந்து கொள்ளலாம்.

## 2. பலவகை வரவு - செலவுத் திட்டங்கள்

வரவு - செலவுத் திட்டம் (Budget) என்பதைச் சிறப்பாக அரசோடு தொடர்புபடுத்திப் பார்க்கின்றோம். ஆனால், பொதுவாக எண்ணிப் பார்த்தால் அரசுக்கு வரவு - செலவுத் திட்டம் தேவையாக இருப்பதனைப் போன்றே தனி மனிதர்களுக்கும், வாணிபம், தொழில் நிறுவனங்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் வரவு - செலவுத் திட்டம் தேவையாக இருப்பதனை அறியலாம்.

**திட்டத்தின் தேவை :** ஒருவர் தமது பொருளாதார வாழ்க்கையைத் திட்டத்தோடும் நடத்திச் செல்லலாம்; திட்டமின்றியும் நடத்திச் செல்லலாம். இரண்டிற்கும் மிகுந்த வேறுபாடு இருக்கின்றது.

முதலில் திட்டமற்ற வாழ்க்கையைப் பார்ப்போம். ஒருவர் ஒவ்வொரு திங்களும் அறுநூறு ரூபாய் வருவாய் பெறுகின்றாரென்று வைத்துக் கொள்வோம். அவரிடம் எப்படிப் பணத்தைச் செலவிடுவதென்ற திட்டமில்லை. என்ன செய்வார்? ஊதியம் பெற்ற தொடக்கத்தில் கையில் நிறையப் பணம் இருப்பதாக எண்ணுவார். எது எது வேண்டுமென்று நினைக்கின்றாரோ அவற்றை எல்லாம் வாங்குவார். செலவில் எந்தக் கட்டுப்பாடும் இருக்காது. திங்களில் இருபதாம் நாளுக்குமேல் கையில் பணம் இருக்காது. ஆனால், செலவிட வேண்டிய தேவைகள் வந்து கொண்டே இருக்கும். வேறு வழியின்றிக் கடன் வாங்குவார். காலப்போக்கில் கடன்பாரம் மிகுகின்றபொழுது தொல்லைப்படுவார்.

அவருடைய வாழ்க்கை திட்டமிட்டதாக இருப்பதாக வைத்துக்கொள்வோம். என்ன செய்வார்? திங்களின் தொடக்கத்திலேயே வருவாயின் அடிப்படையில் என்னென்ன செலவுகள் என்பதை வரையறுத்து, எவ்வளவு செலவிடுவதென்பதை மதிப்பிடுவார். ஓரளவு செலவுக்குமேல் எச்சமாக இருக்கும் வகையில் பார்த்துக் கொள்வார். அவர் தமது திட்டப்படியே செலவிட்டு வந்தால் அவருடைய வாழ்க்கை நிறைவானதாக இருக்கும்.

மற்றைய உயிரினங்களுக்கும் மனிதனுக்கும் உள்ள தலையாய வேறுபாடு அறிவுடைமை என்பதை நாம் அறிவோம். அறிவுள்ள மனிதன் "எப்படியும்" வாழ்ந்து தொலைப்படுவதை விரும்புவதில்லை. "இப்படித்தான்" வாழவேண்டுமென்று முன்னதாகவே தீர்மானித்து வாழ முயல்கின்றான்.

பெரும்பாலான தனி மனிதர்கள் போடுகின்ற வரவு - செலவுத் திட்டங்கள் எழுத்துருவம் பெறுவதில்லை. அவர்கள் மனத்தில் அஃது உருவாகியிருக்கின்றது. ஆனால், திட்டமிட்ட வாழ்க்கையின் சிறப்பு ஒவ்வொன்றிலும் வெளிப்படுகின்றது.

**திட்டத்தின் வகைகள் :** தெளிவான விளக்கம் பெறுவதற்காக வரவு - செலவுத் திட்டங்களை நான்கு வகைகளாகப் பிரித்துக் கொள்ளலாம்.

முதலாவது, தனி மனிதனின் (குடும்பத்தின்) வரவு - செலவுத் திட்டம்.

இரண்டாவது, தொழில், வாணிப நிறுவனங்களின் வரவு - செலவுத் திட்டம்.

மூன்றாவது, பொது நிறுவனங்களின் வரவு - செலவுத் திட்டம்.

நான்காவது, அரசின் வரவு - செலவுத் திட்டம்.

இந்த நான்கு வகைத் திட்டங்களைப்பற்றி முதலில் தனித்தனியாகவும் பிறகு ஒப்பிட்டும் பார்க்கலாம்.

**தனி மனிதரின் வரவு - செலவுத் திட்டம்:** ஒவ்வொரு தனி மனிதருக்கும்(குடும்பத்திற்கும்)வரவுகளும் செலவுகளும் இருக்கின்றன. குடும்பத்தின் வரவுகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று குடும்பத்தினரின் உழைப்பின்மூலம் உறுதியாகக் கிடைக்கக் கூடிய திங்கள் வருவாய். இத்தகைய வருவாயைத் திங்களுக்கு எவ்வளவென்று ஓரளவு திட்டவட்டமாகக் கணிக்கலாம். இரண்டாவது, உறுதியற்ற நிலையில் ஆண்டில் சில தடவைகளோ, எப்பொழுதாவதோ கிடைக்கக் கூடிய வருமானங்கள். இத்தகைய வருமானம் சொத்துகளின் மூலமாகவோ, அன்பளிப்பாகவோ, வேறுவகைகளிலோ கிடைக்கலாம்.

ஒருவரின் செலவுகளும் இரண்டு வகைகளில் அமைகின்றன. ஒன்று : திங்கள்தோறும் மேற்கொள்ள வேண்டிய உணவு, உடை, வீட்டு வாடகை, பொழுது போக்குகள் போன்ற நிலையான செலவுகள். இரண்டு எதிர்பார்த்தோ, எதிர்பார்க்காமலோ வரக் கூடிய செலவுகள். இரண்டாவது வகைச் செலவுகளுக்கு எடுத்துக்காட்டாகத் திருமணம், திருவிழா போன்றவற்றிற்காகும் செலவுகளையும், மருத்துவச் செலவுகள் போன்றவற்றையும் கூறலாம்.

தனிக் குடும்பத்தின் வரவு - செலவுத் திட்டத்தில் நிலையாகத் தொடர்ந்து ஒவ்வொரு திங்களும் வருகின்ற வருவாய்களையும் செலவுகளையும் எடுத்துக் கொள்வதே சிறந்ததாகும். வரவு - செலவுத் திட்டம் ஒரு திங்களுக்குரியதாக இருத்தலே நடைமுறைப் பயனுடையதாக இருக்கும்.

தனி மனிதரின் வரவு - செலவுத் திட்டத்தில் அடிப்படையாகக் கவனிக்க வேண்டிய கொள்கை ஒன்றைக் குறிப்பிடலாம். எப்பொழுதும் வரவுக்குள் செலவு அடங்கும் வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும். இதனை வையத்துள் வாழும் முறையைக் கூறவந்த வள்ளுவர்,

> "ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
> போகாறு அகலாக் கடை"

என்று உரைக்கின்றார். வருகின்ற வருவாய் அளவில் குறைவாக இருப்பதால் கேடு ஏற்படுவதில்லை. வருவாயைவிடச் செலவு கூடுகின்றபொழுதுதான் கேடு தொடங்குகின்றது. இதே கருத்தினை மேலும் வலியுறுத்தித் திருவள்ளுவர்,

> "அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
> இல்லாகித் தோன்றாக் கெடும்"

என்று கூறுகின்றார். வருவாயின் அளவை அறிந்து வாழவேண்டும். அப்படி வாழாவிட்டால் வாழ்க்கை நடப்பதுபோலத் தோன்றுமே தவிர உண்மையில் தேய்ந்து அழிந்துவிடும்.

வரவுக்குமேல் செலவைப் பெருக்கிக்கொண்டு, பின்னல் கடன் வாங்கிச் செலவை ஈடுகட்டுவது நல்லதன்று. எதிர்பாராத செலவுகளுக்குக் கடன்

வாங்குவதும் வருவாயிலிருந்து திங்கள் தோறும் ஒரு பகுதியைச் சேமித்துக் கடனைத் தீர்ப்பதும் தவிர்க்க இயலாமல் இருக்கலாம். ஆனால், திங்கள் தோறும் வருகின்ற நடைமுறைச் செலவுகளுக்குக் கடன் வாங்காமல் வரவுக்குள் செலவைக் கட்டுப் படுத்திக்கொள்ள வரவு - செலவுத் திட்டம் துணை செய்ய வேண்டும்.

தனி மனிதர்களின் வரவு - செலவுத் திட்டத்தில் கடந்த கால வருவாயான சேமிப்புகளையும் சொத்துகளையும் பயன்படுத்தி நிகழ்காலச் செலவுகளைச் சரிக் கட்டுபவர்களும் இருக்கின்றனர். கூடிய வரை முன்னோர்களோ, தாங்களோ சேர்த்து வைத்த வருவாயைப் பயன்படுத்தாமல், நிகழ்கால வருவாயைக் கொண்டே தற்காலச் செலவினை மேற்கொள்வதே சிறந்ததாகும்.


இன்றுள்ள பொருளாதார அமைப்பில் எதிர்கால வருவாயைக்கூட இன்றே செலவிட வாய்ப்புகள் உள்ளன. தவணைமுறை (Instalment Basis) விற்பனையில் திங்கள் தோறும் ஐம்பது ரூபாய் கட்டுவதாக ஒருவர் வானொலிப் பெட்டி வாங்குகின்றாரென்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் இன்றையச் செலவுக்கு எதிர் கால வருவாயையும் பயன்படுத்துவதாக இஃது அமையும். எதிர்காலத்தில் அவரது உண்மை வருவாய் குறையும்.

சிறந்த பொருளாதார நோக்குள்ள தனி மனிதர்கள் எப்பொழுதும் வரவைவிடச் செலவு குறைவாக இருக்கும் வகையில் திட்டம் இடுவார்கள்.

அவர்களுடைய பொருளாதார நிலை கீழ்க்கண்ட வகையில் அமையும்.

வரவு—செலவு = சேமிப்பு

சேமிப்பு × 12 திங்கள் = ஓராண்டுச் சேமிப்பு.




ஆண்டுதோறும் குறிப்பிடத்தக்க அளவில் தொகை சேர்ந்தால் அதனை வருவாய் வரத்தக்க ஏதாவது ஒரு துறையில் முதலீடு செய்யலாம். இதனால் அடுத்த

ஆண்டில் அவருடைய உண்மை வருவாய் கூடும். செலவு கட்டுக்கடங்கி இருக்குமானால் காலப்போக்கில் வருவாயும் சேமிப்பும் கூடிக்கொண்டே செல்லும். இந்நிலையை முன் பக்கம் உள்ள வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.

வரைபடத்தில் படுக்கைக் கோட்டில் (OX) ஆண்டுகளையும் செங்குத்துக் கோட்டில் வருவாயின் அளவினையும் குறித்திருக்கின்றோம். முதலாண்டு வருவாய் ரூ 5,000 என்றால், வருவாய்க்குள் செலவு இருப்பதாகக் கொள்வோம். செ-செ கோடு செலவைக் குறிக்கின்றது. அதற்கு மேலிருக்கின்ற பகுதி சேமிப்பாகும். ஆண்டுதோறும் சேமிப்பின் வழி கிடைக்கும் வருவாயினாலும், பிறவற்றினாலும் வருவாய் கூடுகின்றது. வருவாய் கூடுவதைப்போலச் செலவும் கூடுகின்றது. இருந்தாலும் செலவு கூடுவதைவிட வருவாய் கூடுவது மிகுதியாக இருப்பதால் சேமிப்பின் அளவு வளர்வதைக் காணலாம்.

அறிவுடையவர்கள் தங்களது வரவு-செலவுத் திட்டத்தில் இந்தக் கருத்தினை மனத்தில் கொள்வார்கள். எதிர்கால வளர்ச்சிக்கு அடிப்படை அமைப்பதாகத் தங்களது வரவு-செலவுத் திட்டத்தைத் தீட்டுவார்கள்.

கற்றவர்களைக் கொண்ட நடுத்தரக் குடும்பங்கள் எதிர்கால முன்னேற்றம் கருதிச் சிலவகைச் செலவுகளை மேற்கொள்வது தேவையாகும். எடுத்துக்காட்டாக ஒன்றைக் கூறலாம். வருவாயில் ஒரு பகுதியைத் திங்கள் தோறும் நல்ல நூல்களை வாங்கச் செலவிடலாம். சிறந்த நூல்களுக்காகச் செலவிடுகின்ற பணம் ஒருவகை முதலீடாகும். இதனால் குடும்பத்திற்கு நேரடியாக வருவாய் கிடைக்காவிட்டாலும் குடும்பத்தினரின்

அறிவாற்றலும், ஆக்கத்திறனும், பண்பாடும், நாகரிகமும் வளரச் சான்ரோர்களின் நூல்கள் மிகவும் துணை செய்யும்.

தனிப்பட்ட நிலையில் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு திங்களின் தொடக்கத்திலும் தங்களுடைய வரவுகளையும் செலவுகளையும் திட்டமிடலாம். இதற்கு முதலில் வரவு - செலவுக் கணக்கு எழுதுகின்ற பழக்கம் வரவேண்டும். முந்திய திங்களின் வரவு - செலவுக் கணக்கின் விவரங்கள் வரப்போகின்ற திங்களுக்கான வரவு - செலவுத்திட்டத்தை வகுக்கத் துணை செய்யும்.

ஒரு பொது விதியைக் குடும்பத்தினர் மறக்கக் கூடாது. குடும்பத்தின் வருவாயைக் கூட்டுவதென்பது முழுவதும் நம் கையில் இல்லை. வருவாயைப் பெருக்க நாம் முயலலாம். நம் முயற்சிகளில் எவ்வளவு வெற்றி பெறுமென்பதை முன்கூட்டியே கூற முடியாது. ஆனால், நாம் எண்ணினால் முயன்றால் வேண்டாத செலவுகளைக் குறைக்கலாம். செலவைக் கூட்டுவதும் குறைப்பதும் நம் செயலில்தான் இருக்கின்றது.

குடும்பத்தின் வரப்போகின்ற திங்களின் வரவு - செலவுத் திட்டத்தை வகுக்கின்றவர்கள் வரவுகளையும், செலவுகளையும் தனித்தனியாக எண்ணிப் பார்த்தும், இரண்டையும் ஒப்பிட்டும் மதிப்பிட்டுக் கணக்கிட வேண்டும். நடைமுறையில் நாம் எதிர்பார்க்கின்ற வரவுகள் எதிர்பார்க்கும் காலத்தில், அளவில் வருமென்று கூற முடியாது. அவற்றில் சில வராமல் போகலாம். ஆதலால் வரவுகளைக் குறைத்து மதிப்பிட வேண்டும். அதே நேரத்தில், செலவுகள் எப்பொழுதும் கட்டுக்கடங்கியே இருக்குமென்று கூற முடியாது.

எதிர்பார்க்கும் செலவுகளின் அளவு கூடலாம். எதிர் பார்க்காத புதிய செலவுகளும் தோன்றலாம். ஆதலால் செலவுகளை ஓரளவு மிகுதியாக மதிப்பிடுவது தேவை யாகும்.

நல்ல பண்பாடும், கட்டுப்பாடும் உள்ள நடுத்தரக் குடும்பங்களின் முன்னேற்றத்திற்கு வரவு - செலவுத் திட்டம் மிகவும் துணை செய்யும். பெரிய செல்வந்தர் களுக்குக் கணக்கின்றி வருவாய் கிடைக்குமாதலால் அவர்களுக்குக் குடும்பச் செலவைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை இல்லாமல் இருக்கலாம். வாழ்க் கையில் கீழ்நிலையில், அன்றாட வரவைக் கொண்டு வயிற்றைக்கட்டி, வாயைக்கட்டி வாழ்பவர்களுக்கு வரவு - செலவுத் திட்டம் போட வாய்ப்பு இருப்ப தில்லை. ஆனால், திங்கள்தோறும் ஊதியம் பெறுகின்ற நடுத்தர வகுப்பினருக்கு வரவு - செலவுத் திட்டம் தேவையானதாகும்.

**தொழில் நிறுவனங்களின் வரவு - செலவுத் திட்டம் :** விரிந்த அளவில் செயல்படுகின்ற தொழில், வாணிப நிறுவனங்கள் பெரும்பாலும் வரவு-செலவுத்திட்டத்தை வகுத்துக்கொண்டு செயல்படுகின்றன. தொழில், வாணிப நிறுவனங்களின் வளர்ச்சிக்கு வரவு-செலவுத் திட்டம் தூண்டுதலாகவும், வழிகாட்டியாகவும் அமை கின்றது.

தொழில் நிறுவனம் உற்பத்தியில் ஈடுபடுகின்றது. சென்ற ஆண்டில் ஆக்கிய பொருள்களைவிட வருகின்ற ஆண்டில் ஆக்கும், விற்பனை செய்யும் பொருள்களின் அளவு கூடவேண்டும். அப்பொழுதுதான் கிடைக் கின்ற ஆதாயம் மிகுதியாகும்.

ஆக்கத்துறையில் ஈடுபட்டிருக்கின்ற தொழில் நிறுவனம் சென்ற ஆண்டின் செலவுகளின் அடிப்படையில் இந்த ஆண்டின் செலவுகள் எவ்வாறு அமைய வேண்டுமென்பதை முதலில் கணிக்க வேண்டும். தொழில் நிறுவனங்களில் பொதுவாக இருவகையான செலவுகள் இருக்கின்றன. ஒன்று, பொருள் உற்பத்தித் தொடர்பானவை. இரண்டு, தொழில் நிர்வாகத் தொடர்பானவை.

தொழிலில் பொருளாக்க அளவை ஒட்டி மூலப் பொருள்கள், கூலி, போக்குவரத்து போன்றவற்றிற் கான செலவுகள் கூடும். ஆகின்ற செலவுகளைவிட எதிர்பார்க்கும் வருவாய் மிகுதியாக இருக்குமானால் துணிந்து பொருளாக்கத் துணைச்செலவுகளை மேற் கொள்ளலாம். செலவுகளை எந்த அளவுவரைக் கூட்டலாமென்ற உச்சவரம்பு (Ceiling) தெளிவாக வரையறுக்கப்பெற்றிருக்க வேண்டும்.

கூடியவரை நிர்வாகத் தொடர்பான செலவுகளில் சிக்கனத்தை மேற்கொள்வது சிறந்ததாகும். எவை திறமையான முறையில் நிறுவனம் பணிசெய்யத் தேவைப்படுகின்றனவோ அவற்றிற்கு மட்டும் செலவிட வேண்டும். நிர்வாகச் செலவைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதே நல்லது.

நல்ல தொழில் நிறுவனம் வருவாய் வரும வாய்ப்பு களைப் பெருக்குவதில் தனிக்கவனத்தோடு நடந்து கொள்ளும். அங்காடியின் அளவை மனத்தில் கொண்டு பொருளாக்கத்தை விரிவு படுத்தும். என்னென்ன பொருள்களை எப்பொழுது எப்படி உற்பத்தி செய்து என்ன விலைக்கு எங்கெங்கு விற்பதென்பதற்குத் திட்டம் இருக்க வேண்டும்.

தொழில் நிறுவன வரவு - செலவுத் திட்டத்தில் உயிர்நாடியாக இருப்பது முதலீட்டுத் திட்டமாகும். தொழில் வளர்கின்றபொழுது முதலீட்டைக் கூட்ட வேண்டியது இன்றியமையாததாகும். நிறுவனம் கிடைக்கின்ற ஆதாயத்தில் ஒரு பகுதியை ஆண்டு தோறும் மறு முதலீடு செய்யலாம். இதனால் ஆதாயம் மேலும் மேலும் கூடும்.

முதலீட்டிற்காகத் தொழில் நிறுவனம் கடன் பெறுவது தவருகாது. ஆனால், அத்தகைய முதலீட்டின் மூலம் கிடைக்கின்ற ஆதாயம், பெற்ற கடனுக்குக் கொடுக்கின்ற வட்டியைவிட மிகுதியாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு நிறுவனம் ஆயிரம் ரூபாய் கடன் பெற்றுத் தொழிலில் முதலீடு செய்கின்ற தென்று வைத்துக்கொள்வோம். அந்தக் கடனுக்கு ஆண்டிற்கு வட்டியாக ரூ. 120 கொடுக்க வேண்டி யிருந்தால், கூடுதல் முதலினுல் கிடைக்கும் ஆதாயம் ரூ. 120க்குக் குறையாமல் இருக்கவேண்டும்.

வாணிப நிறுவனமும் தொழில் நிறுவனம் போன்றுதான் அடிப்படையில் வரவு - செலவுத் திட்டத்தைத் தீட்டிக் கொள்ளும். ஆனால், பொரு ளாக்கத்தில் ஈடுபடாததால் அதனுடைய செலவுகள் பெரும்பாலும் பொருள்களை வாங்குதல், விற்றல் தொடர்பாக இருக்கும். வாணிப நிறுவனங்களுக்குப் பொருள்களை வாங்கி இருப்பு வைக்கவேண்டிய தேவை உண்டு. எந்தப் பொருள்களின் விலை கூடுமோ அவற்றை வாங்கி இருப்பு வைக்க வேண்டும். எவற்றின் விலை குறையுமென்று எதிர்பார்க்கின்ருர்களோ அவற்றை விரைந்து விற்பனை செய்யவேண்டும். வாணிப நிறுவனத் தின் வரவு-செலவுத் திட்டத்தில் பொருள்களை இருப்பு

வைக்க வழிவகை செய்யவேண்டும். தொழில் நிறுவனம் போன்றே வாணிப நிறுவனமும் ஆதாயத்தைப் பெருக்க வாய்ப்பு இருக்குமானால் கடன் பெற்று வாணிபத்தைப் பெருக்கலாம்.

சிறந்த நிறுவனங்கள் வளர்ச்சிக்குத் துணையாகத் தனியாக விற்பனைத் திட்டம் (Sales budget) ஒன்றைத் தீட்டிக்கொண்டு செயல்படுகின்றன. விற்பனைத் திட்டத்தில் எப்படிப் படிப்படியாக, விரைந்து விற்பனையைக் கூட்டுவதென்பதற்கான மதிப்பீடுகள் இருக்கும். விற்பனையைக் கூட்டுகின்ற பொழுது விற்பனைச் செலவுகள் மிகுதிப்படும். எவ்வளவு விற்பனைச் செலவு கூடினால் எவ்வளவு வருவாய் கிடைக்குமென்ற கணிப்பு இருக்க வேண்டும். விற்பனையைத் திட்டமிட்டுக் கூட்டுவதில்தான் வாணிப நிறுவனங்களின் வெற்றி அடங்கியிருக்கின்றது.

தொழில், வாணிப நிறுவனத்தாருக்கு முதலீடு பற்றி வளர்புகழ் வள்ளுவர் ஓர் அருமையான கருத்தைக் கூறுகின்றார். ஆதாயம் வேண்டி முதலீடு செய்வது நடைமுறையில் இருவகையில் அமைகின்றது. முதலாவது வகையில் முதலீடு பாதுகாப்பாக இருக்கும். ஆதாயத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டாலும், இழப்பே நேர்ந்தாலும் முதல் அழியாது. சான்றாக ஒரு தொழில் நிறுவனம் இயந்திரத்தில் முதலீடு செய்வதனைக் கூறலாம். இத்தகைய முதலீடு வரவேற்கத் தக்கதாகும். இரண்டாவது வகை முதலீடு சூதாட்டம்போல அமைவதாகும். சான்றாக, பருத்திவிலை கூடுமென்று கருதி, மிகுந்த விலை கொடுத்து ஆயிரக்கணக்கான மூட்டைகளை வாங்கி இருப்பு வைப்பதனைக் கூறலாம். இத்தகைய முதலீட்டில் ஆதாயம் கிடைத்தால்

மிகுதியாக இருக்கும். அதே நேரத்தில் பேரிழப்பு ஏற்பட்டுப் போட்ட முதலே அழிகின்ற நிலையும் வரலாம். இத்தகைய முதலீடு சிறந்ததன்று என்பதனை

''ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்''

என்று செந்தமிழ்ப்புலவர் திருவள்ளுவர் கூறுகின்றார். இந்தக் கருத்தைத் தொழில் - வாணிப நிறுவனத்தினர் எந்த நிலையிலும் மறக்கக் கூடாது.

தொழில், வாணிப நிறுவனங்களின் வரவு - செலவுத் திட்டதைத் திட்ட வழிகாட்டக் கூடிய கணக்கியல் அறிஞர்கள் இருக்கின்றனர். அவர்களின் துணையோடு வரவு - செலவுத் திட்டத்தை வகுக்கலாம். ஏற்படுகின்ற வளர்ச்சி நிலையாக இருக்கின்ற வகையில் வரவு - செலவுத் திட்டம் அமையவேண்டும்.

**பொது நிறுவனங்களின் வரவு - செலவுத் திட்டம்:** நாட்டில் எத்தனையோ பொது நிறுவனங்கள் செயல் படுகின்றன. அவை தொடர்ந்து வளர வேண்டுமானால் சரியான வரவு - செலவுத் திட்டத்தோடு செயல்பட வேண்டும்.

எடுத்துக்காட்டாகத் "தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்'' என்ற ஒன்றைப் பொதுநல நோக்குடைய பல தமிழன்பர்கள் சேர்ந்து நடத்துகின்றார்களென்று வைத்துக் கொள்வோம். அந்த நிறுவனம் ஆண்டின் தொடக்கத்தில் அந்த ஆண்டு மேற்கொள்ளப் போகின்ற பணிகளைத் தீர்மானித்து, அவற்றிற்கு வேண்டிய பணத்தை எப்படிப் பெறுவதென்பதை முடிவுசெய்ய வேண்டும்.

இப்பொழுது நாட்டின் நலனுக்காகப் பணி யாற்றுகின்ற நிறுவனங்களுக்கு அரசு மான்யமாகப்

பணவுதவி செய்கின்றது. உறுப்பினர்களிடம் கட்டணம் வாங்குவது தவிர, பொதுமக்களிடம் நன்கொடை பெறலாம். கலை நிகழ்ச்சிகள் நடத்தியும், மலர் வெளியிட்டும் வருவாயைப் பெருக்கலாம். உறுப்பினர்களின் ஆற்றலையும் ஒத்துழைப்பையும் ஒட்டிப் பொது நிறுவனங்களின் வருவாய் கூடும்.

சிறந்த, வளரக் கூடிய பொது நிறுவனங்கள் ஒவ்வோர் ஆண்டும் செலவுபோகக் கொஞ்சம் பணம் மீதியிருக்கும் வகையில் திட்டமிட்டுச் செயல்படும். ஒவ்வோர் ஆண்டும் எஞ்சுகின்ற நிதியை மொத்தமாகச் சேர்த்து நிறுவனத்திற்கு வேண்டிய கட்டிடம் போன்ற சொத்துகளை வாங்கலாம். வருவாய் தருகின்ற துறைகளில் முதலீடு செய்வதன்மூலம் தனது வருவாயைப் பெருக்க வழி செய்யலாம்.

**அரசின் வரவு-செலவுத் திட்டம் :** ஒவ்வோர் அரசும் சென்ற ஆண்டு, நடப்பு ஆண்டு ஆகியவற்றின் வரவு, செலவுகளின் அடிப்படையில் வரப்போகின்ற ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தை வகுக்கின்றது. மக்களாட்சியில் அரசின் வரவு-செலவுத் திட்டத்திற்குத் தனிச் செல்வாக்கு இருக்கின்றது. நிதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தை வெளியிடுகின்றார். உறுப்பினர்கள் அதனை விரிவாக ஆராய்ந்து அதற்கு ஒப்புதல் அளித்த பிறகுதான் அரசு அடுத்த ஆண்டில் செலவுகளைச் செய்யவோ, வரவு களைப் பெறவோ இயலும். நாடாளுமன்றம் வரவு - செலவுத் திட்டத்தின்மூலம் அரசினைக் கட்டுப் படுத்துகின்றதென்று கூறலாம்.

"வரவு - செலவுத் திட்டம்" என்று தமிழில் கூறு வதை ஆங்கிலத்தில் ''பட்ஜெட்'' (**Budget**) என்று

கூறுகின்றனர் இந்த ஆங்கிலச் சொல்லுக்கு மூலம் ஒரு பிரெஞ்சுச் சொல் (Bougette) ஆகும். அந்தப் பிரெஞ்சுச் சொல்லுக்கு ''சிறிய பை'' என்பது பொருள். இங்கிலாந்தின் நிதியமைச்சர் பாராளுமன்றத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தை ஒரு சிறிய தோல் பையில் வைத்துக்கொண்டு போகின்ற வழக்கம் இருந்தது. அந்தப் பையைக் குறிக்கின்ற சொல்லாக "பட்ஜெட்'' என்பதைப் பயன்படுத்தினர். அதுவே காலப் போக்கில் வரவு - செலவுத் திட்டத்தைக் குறிக்கும் சொல்லாக மாறியது.

வரப்போகின்ற ஆண்டின் எதிர்பார்க்கும் அரசின் வரவுகளையும், செலவுகளையும் முன் கூட்டியே கணக்கிட்டு அறிவிப்பதே வரவு - செலவுத் திட்டமாகும். தற்காலத்தில் மக்களாட்சியில் வரவு - செலவுத் திட்டம் பலவகைகளில் முதன்மை பெற்றுத் திகழ்கின்றது.

பொதுவாக, அரசின் வரவு - செலவுத் திட்டம் அரசினுடைய நிதிக்கொள்கைக்கு விளக்கமாக அமைகின்றது. அரசு மேற்கொள்ளப் போகின்ற புதிய பொருளாதாரப் பணிகளைப் பற்றியும், விதிக்கப் போகின்ற வரிகளைப் பற்றியும் வரவு - செலவுத் திட்டத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

அரசினுடைய வரவு - செலவுத் திட்டத்திற்கும் நாட்டின் பொருளாக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. சிறந்த திட்டம் உற்பத்தி பெருக வழிவகுக்கும். நாட்டின் மொத்த வருவாயை ஒரே சீராகப் பகிர்ந்து கொள்வதை நெறிப்படுத்தும் பணியையும் வரவு - செலவுத்திட்டம் செய்கின்றது.

அரசின் வரவு - செலவுத் திட்டம் அரசு ஓராண்டில் எதிர்பார்க்கின்ற வருவாய்களைப் பட்டியல் போட்டுக் காட்டுகின்றது. அதேபோல எதிர்நோக்கு கின்ற செலவினங்களையும் வகுத்து, தொகுத்து, முறைப் படுத்தித் தருகின்றது.

அரசு முதலில் செலவுகளை மதிப்பிடுகின்றது. தற்காலத்தில் அரசின் பணிகள் மிகுந்திருப்பதால் அரசின் செலவுகளும் வளர்ந்துகொண்டிருக்கின்றன. வெறும் காவல் அரசாக (Police state) இருந்த நிலைமாறி மக்கள் நலம் பேணும் அரசாகச் (Welfare state) செயல் படுவதால் புதுப்புதுச் செலவுகளை அரசு மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

அரசு எதிர்பார்க்கின்ற செலவுகளை ஒட்டி வருவாய்க்கான வழிமுறைகளை ஆராய்கின்றது. அரசுக்கு வரி விதிக்கின்ற ஆற்றலும், கடன் வாங்க உரிமையும், பணம் வெளியிடும் தனிச் செல்வாக்கும் இருப்பதால் எத்தனையோ வழிகளில் தனக்குத் தேவையான பணத்தைப் பெறுகின்றது.

நமது நாட்டில் மாநில அரசுகளும், நடுவண அரசும் ஆண்டுதோறும் தனித்தனியாக வரவு-செலவுத் திட்டங்களைத் தீட்டிக்கொண்டு செயல்படுகின்றன. அரசின் வரவு - செலவுத் திட்டங்கள் எப்படி அமைய வேண்டும் என்பதுபற்றிப் பொருளியலறிஞர்கள் ஆராய்ந்து விரிவாகக் கருத்துகளைக் கூறியுள்ளனர். இவை பற்றிப் பின்னால்வரும் பகுதிகளில் விளக்கமாகக் காணலாம்.

**வேறுபாடு :** தனியாரின் வரவு - செலவுத் திட்டத் திற்கும் அரசின் வரவு - செலவுத் திட்டத்திற்கும் சில

குறிப்பிடத்தக்க அடிப்படையான வேறுபாடுகள் உள்ளன. அவற்றைத் தொகுத்துக் கூறலாம்.

தனியாரின் வரவு - செலவுத் திட்டத்தில் முதலில் வருவாயின் அளவைக் கவனிக்க வேண்டும். வரவுக்குள்ளேயே செலவைக் கட்டுப்படுத்த வேண்டியது தனியார் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். ஆனால், அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் முதலில் செலவையே மதிப்பிடுகின்றனர். செலவுக்கு வேண்டிய பணத்தை எங்கெந்த வகையில் பெறுவதென்பதைப் பின்பு திட்டமிடுகின்றனர். அரசின் திறமை திட்டத்திற்கேற்ப வருவாயைப் பெருக்கிக்கொள்வதிலிருக்கின்றது.

தனியார் தமது செலவுகளைச் சரிக்கட்ட கடன் வாங்குவது வரவேற்கத்தக்கதன்று. தவிர்க்க முடியாத நிலைகளில்தான் தனியார் கடன் வாங்கலாம். அதுவும் உள்நாட்டுக் கடன்தான் பெறலாம். ஆனால், அரசு கடன் பெறுவதைத் தவறென்று கருதுவதில்லை. அரசு உள்நாட்டிலும் கடன் பெறலாம்; வெளிநாட்டிலும் கடன் பெறலாம்.

தனியார் தமது சொந்த வருவாயிலேயே செலவு செய்ய வேண்டும். அரசின் நிலை அப்படியில்லை. நாட்டில் பொருள்வளம் மிகுதியாக இருக்குமானால் மக்களிடமிருந்து அரசினால் வருவாய் பெற முடியும். அரசின் வருவாயைக் கூட்ட வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன.

தனியார் வரவு - செலவுத் திட்டத்தில் தனி மனிதனின், குடும்பத்தின் வாழ்வும், வளமும், நலமும், முன்னேற்றமும் முதன்மையாகக் கருதப் பெறுகின்றது.

ஆனால், அரசு தனது வரவு - செலவுத் திட்டத்தில் மக்களின் பொதுநலத்திற்கு முதலிடம் தருகின்றது. பொது அறத்தைக் கட்டிக் காக்கும் வகையில் அரசு பணத்தைச் செலவிடுகின்றது.

தனியாரின் வரவு - செலவுத் திட்டம் பெரும் பாலும் குறுகிய காலக் கண்ணோட்டத்தோடு அமை கின்றது. உடனடித் தேவைகளை நிறைவு செய்வதி லேயே தனிக் கவனம் செலுத்துகின்றனர். ஆனால், அரசு மிக நீண்ட காலக் கண்ணோட்டத்தோடு வரவு - செலவுத் திட்டத்தை வகுக்கின்றது. அரசின் எதிர் காலப் பாதுகாப்பு இன்றைய செலவில் அடங்கி யிருக்கின்றது. ஆதலால், மிகக் கவனமாக, தொலை நோக்கோடு அரசு திட்டத்தைத் தீட்ட வேண்டும்.

அரசின் வரவு - செலவுத் திட்டத்தை மேற் போக்காகப் பார்த்தால் வெறும் எண்களின் தொகுப் பாகத் தோன்றுகின்றது. ஆனால், ஊன்றிக்கவனித்தால் இந்த எண்களுக்கும் மக்களின் வாழ்விற்குமுள்ள நெருக்கமான தொடர்பு விளங்கும். அரசின் வரவு - செலவுத் திட்டத்தால் நாட்டு மக்களெல்லாம் ஏதாவது ஒரு வகையில் பயனடைவார்கள் அல்லது பாதிக்கப் படுவார்கள். ஆதலால், அதன் இயல்புகளைப் பற்றியும், நுணுக்கங்களைப் பற்றியும் அறிந்து கொள்வோம்.

———

## 3. அரசின் வரவு - செலவுத் திட்டத்தின் அடிப்படை

அரசின் வரவு - செலவுத் திட்டத்தின் பயன் பாட்டை இன்று உலகம் உணர்ந்திருக்கின்றது. நாடாளு மன்றம் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிப் பதன் மூலம் அரசின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத் தவும், நெறிப்படுத்தவும் செய்கின்றது. நாடாளு மன்றம் ஏற்றுக்கொண்ட வரவு, செலவுகளை மட்டுமே அரசு மேற்கொள்ள இயலும். இதனால் அரசின் வரவு களையும் செலவுகளையும் வரையறுத்துத் தருகின்ற கருவியாக வரவு-செலவுத் திட்டம் விளங்குகின்றது.

வரவு - செலவுத் திட்டம் அரசின் பொருளாதாரக் கொள்கையை வெளிப்படுத்தும் கண்ணாடிபோல இருக் கின்றது. எடுத்துக்காட்டாக, அரசு ஏற்றுமதியை ஊக்குவிக்க விரும்புகின்றதென்று வைத்துக்கொள் வோம். இஃது அரசினுடைய வரிவிதிப்பு முறையில் வெளிப்படும். ஏற்றுமதிக்கான பொருட்களை ஆக்கு வதில் ஈடுபட்டிருக்கும் தொழில்களை ஊக்குவிக்கும். ஏற்றுமதிவரிகளைக் குறைக்கலாம். இவற்றால் அரசின் கண்ணோட்டம் வெளிப்பட வாய்ப்பிருக்கின்றது.

அரசின் நிதி நிர்வாகம் செவ்வனே நடைபெற வரவு - செலவுத்திட்டம் வழி வகுக்கின்றது. முன் ஒப்புதல் பெற்றே அரசு செலவுகளை மேற்கொள்ள வேண்டியதிருப்பதால், அரசுத் துறைகள் தங்களுடைய விருப்பம்போல் செலவுகளை மேற்கொள்ள முடியாது. வரவு - செலவுத் திட்டம் அமைத்துக் கொடுக்கும்

பாதையில்தான் அரசுத் துறைகள் நடைபயில முடியும். அரசுத் துறைகளின் கணக்குகளை வரவு - செலவுத் திட்டத்தின் அடிப்படையிலேயே தணிக்கை செய்கின்றனர்.

**நோக்கங்கள் :** அரசு வரவு - செலவுத் திட்டம் தீட்டுவதற்கும், அதனை ஒட்டி வரவுகளைப் பெறவும், செலவுகளை மேற்கொள்ளவும் முயல்வதற்கும் சில தலையாய நோக்கங்கள் இருக்கின்றன.

வரவு - செலவுத் திட்டம் தீட்டப்படுகின்ற பொழுது எல்லாத் துறைகளும் இப் பணியில் ஈடுபடுகின்றன. நடப்பு ஆண்டின் செலவுகளையும் வரவுகளையும் ஒட்டி, வரப்போகின்ற ஆண்டின் செலவுகளையும் வரவுகளையும் ஒவ்வொரு துறையினரும் தனித்தனியாக மதிப்பிடுகின்றனர். ஒருவகையில் இது வரப்போகின்ற ஆண்டின் செயல்திட்டமாக உருவாகின்றது. மரபு வழிப் பணிகளோடு புதிய பணிகளையும் மேற்கொள்வதைப்பற்றி எண்ணிப் பார்த்துத் திட்டமிட வாய்ப்புக் கிடைக்கின்றது.

செலவுகளுக்குப் பணம் வேண்டும்பொழுது, என்னென்ன செலவுகள் என்பதையும், என்ன நோக்கத்தோடு அரசு மேற்கொள்ளப் போகின்றதென்பதையும், எதிர்பார்க்கின்ற விளைவுகள் யாவை என்பதையும், வேலைத் திட்டத்தையும் அரசு கூற வேண்டும். இதனால் பொதுமக்கள் அரசின் பணிகளைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசின் வருவாய்களையும், செலவுகளையும் தொகுத்துப் பார்க்கவும், ஒப்பிட்டு அறியவும் வரவு - செலவுத்திட்டம் துணை

செய்கின்றது. அவர்கள் பகுத்தாய்ந்து பார்த்துத் தங்களுடைய கருத்துகளைக் கூற ஏற்ற முறையில் வரவு - செலவுத் திட்டத்தை வழங்குகின்றனர்.

கடந்தகால நடைமுறைப் பட்டறிவின் அடிப்படையில் வரவு - செலவுகளைத் தீர்மானிப்பதால் வேண்டிய மாற்றங்களைச் செய்ய முடிகின்றது. வரவு - செலவுத் திட்டத்தின் தரம் உயர்ந்து வருகின்றது

நிதி நிர்வாகத்தைச் சீர்ப்படுத்தும் நோக்கமும் இருக்கின்றது. முறைப்படி கணக்குகளை வைக்க, தணிக்கை செய்ய வேண்டிய கட்டாயத்தை வரவு - செலவுத் திட்டம் தோற்றுவிக்கின்றது. கட்டுப்பாட்டோடு கணக்குகளைச் சரிபார்க்க வரவு - செலவுத் திட்டம் உற்ற துணையாகின்றது.

**மூன்று நிலைகள் :** அரசின் ஓராண்டின் வரவினங்களையும் செலவினங்களையும் தொகுத்துத் தருகின்ற வரவு - செலவுத் திட்டம் வரவு - செலவுகளின் உறவை ஒட்டி மூன்று நிலைகளில் அமையும்.

முதலாவதாக, அரசின் வரவுகளும், செலவுகளும் சரி நிகராக இருக்கும் வகையில் வரவு - செலவுத் திட்டம் அமையலாம். எவ்வளவு அரசுக்குச் செலவுகள் ஏற்படுமோ அதே அளவில் அரசுக்கு வருவாய் கிடைக்கத் திட்டம் தீட்டினால் வரவுகளும் செலவுகளும் ஒரே அளவில் இருக்கும். இப்படிப்பட்ட திட்டத்தை "ஒத்த வரவு - செலவுத் திட்டம்" (Balanced budget) என்று கூறலாம். தனி மனிதர்கள் வரவுகளும் செலவுகளும் சமநிலையில் இருக்கும் வகையில் வரவு - செலவுத் திட்டத்தை வரைந்து கொள்ளலாம். ஆனால், நடைமுறையில் ஓர் அரசினால்

ஒத்த வரவு - செலவுத் திட்டத்தைத் தீட்ட இயல்வ தில்லை.

இரண்டாவதாக, அரசின் மொத்த வரவுகள் செலவுகளைவிட மிகுதியாக இருக்கும் வகையில் போடுகின்ற திட்டத்தை எச்ச வரவு - செலவுத் திட்டம் (Surplus budget) என்கின்றனர். வளர்ச்சி பெற்ற நாடுகளில், அமைதியான சூழ்நிலையில், "எச்ச வரவு - செலவுத் திட்டம்" தீட்டுகின்றனர்.

மூன்றாவதாக, அரசின் மொத்த வருவாயைவிடச் செலவுகள் மிகுதியாக இருக்கும் நிலையைப் பார்க்கலாம். இப்படிப்பட்டதை "பற்றாக்குறை வரவு - செலவுத் திட்டம்" (Deficit budget) என்று கூறுகின்றோம். பெரும்பாலான பின்தங்கிய நாடுகளின் வரவு-செலவுத் திட்டம் இந்த வகையிலேயே அமைகின்றது. எடுத்துக் காட்டாக நமது நாட்டைக் கூறலாம். ஐந்தாண்டுத் திட்டங்களின்மூலமாக விரைவான முன்னேற்றத்தைக் காண விரும்புகின்றோம். பல வளர்ச்சிப் பணிகளை அரசு மேற்கொள்கின்றது. அரசின் பாதுகாப்புச் செலவுகளும் வேகமாகக் கூடுகின்றன. அரசின் செலவுகள் பெருகுகின்ற அளவிற்கு வரவுகளை உடனடியாக உயர்த்த முடியாத நிலை வருகின்றது. இந் நிலையில் வரவுகளைவிடச் செலவுகள் மிகுதியாக இருக்கும் பற்றாக்குறை வரவு - செலவுத் திட்டத்தை அரசு நிறைவேற்றுகின்றது. இந்தப் பற்றாக்குறையை வேறு முறைகளில் இட்டு நிரப்புகின்றது. (இதனைப்பற்றிப் பின்னால் தனியாக விவரமாக அறிந்து கொள்ளலாம்.)

**அன்றும் இன்றும் :** முன்பு அரசின் பணிகள் அளவோடு இருந்தன. அவற்றைப் பற்றி அரசு திட்ட

வட்டமாகக் கணிக்க முடிந்தது. பெரும்பாலும் அரசு நேரடியாகப் பொருளாதாரப் பணிகளில் ஈடுபடுவதில்லை. பொதுவாகப் பல நாடுகளில் அரசு "தலையிடாக் கொள்கையை" (Laissez faire) பின் பற்றியது. தனியாரின் பொருளாதாரப் பணிகளில் அரசு தலையிடுவதில்லை. ஒதுங்கி நின்று நாட்டின் புறப் பாதுகாப்பு, அறம் கூறுதல், சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுதல் போன்ற இன்றியமையாப் பணிகளை மட்டும் மேற்கொண்டது. அன்றைய சூழ்நிலையில் வரவு - செலவுத் திட்டம் எளிதானதாகவும், திட்டவட்டமானதாகவும் இருந்தது.

இப்பொழுது சூழ்நிலை மிகவும் மாறிவிட்டது. அரசின் பணிகள் வளர்ந்துகொண்டேயிருக்கின்றன. பொருளாதார ஆக்கப் பணிகளில் அரசு நேரடியாக ஈடுபடுகின்றது. நாட்டின் எல்லாப் பொருளாதாரப் பணிகளையும் நெறிப்படுத்திக் கட்டுப்படுகின்ற பணிகளை அரசு மேற்கொள்வது தேவையாகின்றது. இத்தகைய போக்கினால் அரசின் செலவுகள் மிகுவதோடு சிக்கல் நிறைந்ததாகவும் இருக்கின்றன.

இன்று அரசினால் வரவுகளையும் செலவுகளையும் திட்டவட்டமாகக் கணிக்க முடியவில்லை. எதிர்பாரா நிலையில் புதிய செலவுகள் தலை தூக்குகின்றன. நாட்டில் மழைவளம் குன்றிப் பஞ்சம் ஏற்படுமானால் மக்களின் உயிரைக் காக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதிருக்கின்றது.

அரசின் செலவுகளை ஓராண்டுக் கணக்கில் மதிப்பிடுகின்றனர். இதில் சில சிக்கல்கள் உள்ளன. சில பணிகள் இரண்டு மூன்றாண்டுகள் தொடர்ந்து நடை

பெறுவதாக இருக்கலாம். கங்கைத் தண்ணீரைக் காவிரிக்குக் கொண்டுவர அரசு திட்டம் தீட்டுகின்றது என்று வைத்துக் கொள்வோம். இந்தத் திட்டம் ஓராண்டில் நடைபெறாது. ஆண்டுக்கு எவ்வளவு செலவாகுமென்று கணிப்பது சிக்கலான பணியாகும்.

விலைகள் ஏறுகின்ற காலத்தில் அரசு தனது வரவு - செலவுத் திட்டத்தை மாற்ற வேண்டியதிருக்கின்றது. செலவுகள் எதிர்பார்த்ததைவிட கூடுவதால் மதிப்பீடுகள் தவறுகின்றன. திட்டத்தின் பயன் முழுமையாகக் கிடைக்காமல் போகின்றது.

வரவு - செலவுத் திட்டம் தீட்டுவதிலும் செயல்படுத்துவதிலும் எத்தனையோ சிக்கல்கள் இருந்தாலும், வரவு - செலவுத் திட்டம் அரசின் செலவுகளின் அளவையும் போக்கையும் முன்னதாகவே வெளிக்காட்டுகின்றது. நாட்டு மக்களுக்குத் தாங்கள் கொடுக்கப் போகின்ற வரியைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கின்றது. அரசின் பணிகளால் பொதுமக்களுக்குக் கிடைக்கப் போகின்ற நன்மைகளைப்பற்றி அறிந்துகொள்ள வரவு - செலவுத் திட்டம் வாய்ப்பளிக்கின்றது.

**அரசின் வரவுகள் :** அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் ஒரு பகுதியாக வரவுகள் உள்ளன. அரசுக்கு வருவாய் தரக்கூடிய வழிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. உலகியல் துறைகளின் உட்பொருளை உரைத்து ஓங்கு புகழ்கொண்ட வள்ளுவர் அரசுக்குக் கிடைக்கக் கூடிய வருவாய்களை மூன்றாக வகைப்படுத்திக் கூறுகின்றார்.

முதலாவதாக, அரசுக்குப் பல்வேறு வகையான வரிகள் கிடைக்கின்றன. பொதுநிதியின் வரலாற்றைப் படிப்பவர்கள் அரசு விதிக்கும் வரிகள் ஆண்டுக்கு ஆண்டு எண்ணிக்கையிலும் பண அளவிலும் மிகுந்து வருவதைக் காண்பார்கள். உலகிலுள்ள எல்லா நாடுகளும் இப்பொழுது பல்வேறு வகையான வரிகளைப் பெறுகின்றன. அரசின் வருவாயில் வரி வருவாய் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது. அரசுக்கு வரி செலுத்துவது குடிகளின் கடமையாகும். பழங்காலத்தில் நிலம் படைத்தவர்கள் தங்களது விளைச்சலில் ஒரு பகுதியை அரசுக்குச் செலுத்தி வந்தனர். குடிமக்கள் கடமையாகக் கருதிச் செலுத்துகின்ற பொருளை (உறுபொருள்) வள்ளுவர் முதல் வகை வருவாயாகக் கருதுகின்றார். இதேபோல உடைமையாளர் இல்லாமல் போகும் சொத்துகளும் அரசுக்குச் சேர்கின்றன. இவற்றையும் "உறுபொருள்" எனக் கூறலாம்.

இரண்டாவதாக, வள்ளுவரின் வாய்மொழிப்படி அரசுக்குக் கிடைப்பது "சுங்கப் பொருளாகும்" (உல்குபொருள்) சங்க காலத்திலேயே தமிழகத்திலிருந்து பல பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிச் சென்றன. அதேபோல வெளிநாடுகளிலிருந்தும் பொருள்கள் இறக்குமதியாயின. வெளிநாட்டு வாணிபப் பொருள்களின்மீது விதிக்கின்ற வரிகளின்மூலம் அரசுக்கு நல்ல வருவாய் அன்றும் கிடைத்தது; இன்றும் கிடைக்கின்றது.

மூன்றாவதாக, அந்தக் காலத்தில் அரசர் தாங்கள் வென்ற பகைவர்களிடமிருந்து திறையாகப் பொருளைப்

(தெறுபொருள்) பெறுவார்கள். இக் காலத்தில் இத்தகைய வருவாய் அரசுக்குக் கிடைப்பதில்லை. ஆனால், வள்ளுவர் தாம் வாழ்ந்தகாலச் சூழலை ஒட்டி இப்படிக் கிடைக்கின்ற பொருளை மூன்றாவது வகையாகக் கருதுகின்றார்.

அரசுக்குக் கிடைக்கும் இந்த மூன்று வகைப் பொருள்களையும் பற்றி,

"உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்"

என்று திருக்குறள் கூறுகின்றது.

இந்தக் காலத்தில் பல புதிய முறைகளிலும் அரசுக்கு வருவாய் கிடைக்கின்றது. நிலவரி, சொத்துவரி, செல்வவரி, செலவுவரி, கொடைவரி, வருமானவரி விற்பனைவரி போன்ற பல வரி வருவாயோடு அரசு முதலீடுசெய்த துறைகளிலிருந்து வருவாய் கிடைக்கின்றது எடுத்துக்காட்டாக அரசு பெரிய இரும்பு-எஃகுத்தொழிலை நடத்தினால் அதிலிருந்து கிடைக்கின்ற வருவாயைக் கூறலாம்.

அரசின் பல்வேறு துறைகளிலிருந்தும் அரசுக்கு வருவாய் கிடைக்கின்றது. இத்தகைய வருவாய்கள் இரு வகைகளாக அமையலாம். ஒன்று அரசு செய்கின்ற பணிகளுக்காகக் கிடைப்பது. எடுத்துக்காட்டாக, நீதித்துறையின் வருவாயைக் குறிப்பிடலாம். வழக்குத் தொடர்கின்றவர்கள் கட்டணம் செலுத்துகின்றனர். இப்படி ஒவ்வொரு துறையும் குறிப்பிட்ட பணிகளுக்குக் கட்டணம் பெறுகின்றது. இரண்டாவதாக, குற்றவாளிகளிடமிருந்து கிடைக்கின்ற தண்டப் பணம், கள்ளக் கடத்தல்காரர்கள்

போன்றவர்களிடமிருந்து கைப்பற்றும் பணம், புதையல் போன்ற வேறுவகை வருவாய்கள் கிடைக்கின்றன. முதல்வகை வருவாயை ஓரளவு திட்டவட்டமாக அரசினால் மதிப்பிடமுடியும். ஆனால், இரண்டாவது வகை வருவாயை முன்கூட்டித் தீர்மானிக்க இயலாது.

அரசுக்குக் கிடைக்கின்ற வருவாயில் மற்றொரு குறிப்பிடத்தக்க வருவாய் கடன்மூலம் வருவதாகும். அரசு கொடுத்த கடனிலிருந்து வட்டி வரலாம். அரசு கொடுத்த கடன் திரும்பி வரலாம். புதிய கடன்களின் மூலமாகவும் அரசு வருவாயைப் பெறலாம்.

அரசின் கையில் மிகுதியாக அதிகாரம் இருப்பதால் புதிய புதிய துறைகளில் வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம். ஆனால், பொதுமக்களைத் தொல்லைப் படுத்தாமல், கொடுக்கும் ஆற்றல் உள்ளவர்களிடம் சில கொள்கைகளின் அடிப்படையில் அரசு வருவாய் பெறுவதே சிறந்ததென அறிஞர்கள் கருதுகின்றனர்.

**செலவுகள்:** அரசு திறமையாகச் செயல்படவும் மக்களின் நலனைக் கட்டிக் காக்கவும் எண்ணற்ற செலவுகளை மேற்கொள்ள வேண்டியதிருக்கின்றது. இந்தச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்குத்தான் அரசு முயன்று வருவாயைப் பெறுகின்றதென்பதை மறந்து விடக்கூடாது.

அரசின் செலவுகளில் தொடர்ந்து ஏற்படக் கூடியது நிர்வாகச் செலவாகும். அரசின் ஊழியர்களுக்கு ஊதியம் கொடுத்தல், அரசின் அலுவலகங்களில் ஆகின்ற செலவுகளைக் கவனித்தல் வேண்டும்.

அரசு தனது ஒவ்வொரு துறையையும் நடத்தச் செலவிடுவதே நிர்வாகச் செலவாகும்.

அரசுக்கு முதலீட்டுச் செலவுகளை மேற்கொள்ள வேண்டிய தேவைகள் உள்ளன. தனியாரின் முதலீட்டைச் செலவாகக் கருதுவதில்லை. ஆனால், அரசுக்கு முதலீடும் செலவாகவே கருதப் பெறுகின்றது.

அரசு வாங்கிய கடனுக்கு வட்டி கொடுத்தல் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்தல் போன்றவற்றிற்காகவும் செலவுகளை மேற்கொள்கின்றது.

தற்காலத்தில் மக்களாட்சி முறையை ஒட்டி அரசுக்குப் பல்வேறு செலவுகள் ஏற்படுகின்றன. தேர்தல் நடத்துதல், நாடாளு மன்றம், சட்டமன்றம் போன்றவற்றை இயக்குதல், இவை தொடர்பான பிற பணிகள் ஆகியவற்றிற்காகவும் அரசு பணத்தைச் செலவிடுகின்றது.

அரசின் செலவுகளில் தற்காலத்தில் வளர்ந்து வருபவை சமுதாயப்பணிச் செலவுகளாகும். கல்வி, மருத்துவம், பொதுநல வழி (சுகாதாரம்,) சிற்றூர் முன்னேற்றம், ஒலிபரப்பு, அஞ்சல் துறை, போக்கு வரத்துப் பணிகளின் வளர்ச்சி ஆகியவற்றிற்காக அரசு பணச்செலவை மேற்கொள்கின்றது.

அரசின் செலவுகளில் குறிப்பிடத்தக்க அளவில் செலவாகும் துறைகள் உள்நாட்டு, வெளிநாட்டுப் பாதுகாப்புத் துறைகளாகும். பலவகைப்படைப் பிரிவுகளையும், காவல் பகுதியையும் வைத்துக் கொள்ளவும், படைக் கருவிகளைப் படைப்பதற்கும், போர்

தொடர்பானவற்றை ஆராய்ச்சி செய்வதற்கும் அரசு நிறையப் பணத்தைச் செலவிடுகின்றது.

இத்தகைய அரசின் எதிர்பார்க்கும் செலவுகளை முறைப்படுத்தி வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடு கின்றனர். ஒவ்வொரு செலவைப்பற்றிய விளக்கக் குறிப்புகளும் வரவு - செலவுத் திட்டத்தில் இடம் பெறுகின்றன. எதிர்பார்க்காத செலவுகளுக்காகவும் தனியாகப் பணத்தை ஒதுக்குகின்றனர்.

**கணக்கு வைக்கும் முறை :** அரசின் வரவு செலவுத் திட்டத்திற்கும் கணக்கு வைக்கும் முறைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. தக்கமுறையில் அரசின் பல்வேறு துறைகளும் கணக்குகளை வைத்திருந்து, அவை உரிய காலத்தில் சரியான முறையில் தணிக்கைசெய்யப்பட்டால், அவற்றின் அடிப்படையில் வரவு - செலவுத் திட்டத்தைத் தீட்டுவது எளிதாக இருக்கும்.

அரசு வரவுகளையும் செலவுகளையும் ஒருமுகப் படுத்தும் நோக்கில் எல்லாத்துறைகளின் வரவு களைப் பெறவும், செலவுகளைக் கொடுக்கவும் தனிக் கருவூலங்களை (Treasuries) அமைத்திருக்கின்றது. இப்பொழுது அரசின் வங்கிகளும் அரசுக்காகக் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்கின்றன.

**அச்சாணி :** அரசின் பணிகளுக்கு அச்சாணியாக வரவு - செலவுத் திட்டம் அமைந்திருக்கின்றது. சிறந்த வ்ரவு - செலவுத் திட்டம் அரசின் பணிகள் தங்கு தடங்கலின்றி நடைபெறவும், விரிவடைந்து கொண்டு செல்லவும் மக்கள் நலம் கட்டிக் காக்கப்படவும் வழிவகுக்கின்றது.

அரசின் எல்லாத்துறைகளும் நன்றாகச் செயல்பட அடிப்படை அமைத்துத் தருகின்ற வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சகம் தீட்டுகின்றது. இதனை நிதிஅமைச்சர் நாடாளுமன்றத்தில் வெளியிட்டு அதன் ஒப்புதலைப் பெறுகின்றார். நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெற்ற வரவு - செலவுத் திட்டம் செயல் படுத்தப் பெறுகின்றது.

## 4. இந்திய அரசின் வரவு - செலவுத் திட்டமுறை

இந்தியா ஒரு கூட்டரசு (Federal State) நாடாகும். 21 மாநிலங்களையும் 9 நடுவண அரசின் பகுதிகளையும் கொண்ட பெரிய நாடு இந்தியா. இந்திய அரசின் கட்டுக்கோப்பில் நடுவண அரசும், மாநில அரசுகளும் இணைந்தும், தனித்தனியாகவும் பல பணிகளை மேற்கொள்கின்றன. நாட்டின் மொத்த ஆட்சிப் பொறுப்பு நடுவண அரசிடம் இருக்கின்றது. மாநில அரசுகள் தங்களது பகுதியின் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்கின்றன.

நாட்டின் நிர்வாகப்பொறுப்பு நடுவண அரசிடமும் மாநில அரசுகளிடமும் இருப்பதால், அவை தனித் தனியே வரவு - செலவுத்திட்டங்களைத் தீட்டிக்கொண்டு செயல்படுகின்றன. இதனால் நமது நாட்டில் பல வரவு - செலவுத் திட்டங்கள் இருக்கின்றன.

நடுவண அரசின் வரவு - செலவுத் திட்டம் நாடு முழுவதையும் கணக்கில் கொண்டு உருவாக்கப் பெறு கின்றது. மாநில அரசுகளின் வரவு - செலவுத் திட்டங்கள் மாநிலங்களின் அளவில் அமைகின்றன. நடுவண அரசின் வரவு - செலவுத் திட்டத்தை இந்திய நிதியமைச்சர் தீட்டுகின்றார். அதனை நாடாளு மன்றம் ஏற்றுக் கொண்டபின் அது செயல்படு கின்றது. மாநில அரசுகளின் வரவு - செலவுத் திட்டங்களை அந்தந்த மாநிலங்களின் நிதியமைச்சர்கள்

திட்ட, சட்டமன்றங்கள் ஒப்புதல் அளிக்கின்றன. அதன் பின்னர் அவை செயல்படுகின்றன.

**அரசியல் நிர்ணயச் சட்டம் (Constitution) :** 1947 ஆம் ஆண்டுவரை நமதுநாடு ஆங்கிலேயர்களிடம் இருந்தது. ஆங்கிலேய அரசின் ஆணைகளின்படி இந்திய அரசு செயல்பட்டது. அப்பொழுது, இந்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தின் நோக்கம் நாட்டைப் பாதுகாப்ப தாகவும், சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதாகவும் இருந்தது. ஆங்கிலேயர்களின் நிதிக்கொள்கை இந்தியர் களின் நலனை வளர்ப்பதாக இருக்கவில்லை.

1947 ஆகஸ்டு 15 இல் நாடு விடுதலை பெற்று, 1950 சனவரி 26 இல் குடியரசாக மலர்ந்தபிறகு, இந்திய அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் புதிய போக்குத் தோன்றியிருக்கின்றது. இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தின் அடிப்படையான உயிரோட்டக்கொள்கை களின்படி இந்தியாவின் வரவு - செலவுத்திட்டம் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றது.

நமது அரசியல் நிர்ணயச்சட்டம் நடுவண அரசு எந்தெந்த வரிகளை விதிக்கலாமென்பதையும், மாநில அரசுகளுக்குரிய வரி வருவாய்களையும் வரையறுத்துக் கூறுகின்றது. அரசியல் நிர்ணயச் சட்டதிட்டங்களின் விதிமுறைகளின்படி, நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெற்றே இந்திய அரசு வரவுகளைப் பெறவோ, செலவுகளை மேற்கொள்ளவோ வேண்டும்.

**வரவு - செலவுத் திட்டம் :** இந்திய அரசின் வரவு - செலவுத் திட்டத்தை நன்கு விளங்கிக் கொள்ள, முதலில் வரவு - செலவுத் திட்டத்தை எப்படி, எந்த முறையில் வெளியிடுகின்றார்களென்பதையும்,

கணக்கை எப்படி வைத்துக் கொள்கின்றார்களென் பதையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

வரவு - செலவுத்திட்டத்தில் வரவுகள், செலவுகள் தொடர்பான எல்லாப் புள்ளி விவரங்களையும் மூன்று வகையாகக் கோவைப்படுத்தித் தருகின்றனர். முதலில் சென்ற ஆண்டில் உண்மையில் நடந்த வரவு, செலவுகள் பற்றிய (Actual Figures) விவரங்களைத் தொகுத்து வழங்குகின்றனர். இரண்டாவதாக, நடப்பு ஆண்டின் வரவு செலவுகளின் திருத்தியமைக்கப்பெற்ற மதிப்பீடுகளை (Revised estimates) வகைப்படுத்தி அளிக்கின்றனர். மூன்றுவதாக, வரப்போகின்ற ஆண்டின் வரவு செலவுகளின் மதிப்பீடுகளைக் கொடுக்கின்றனர்.

எடுத்துக்காட்டாக, 1976 - 77ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தைப் பார்க்கலாம். அதில் 1974 - 75இல் உண்மையில் பெற்ற வரவுகளும், ஆன செலவுகளும் முதலில் குறிக்கப்பட்டிருக்கும். அருகில், 1975 - 76இல் திருத்தியமைக்கப்பெற்ற வரவு செலவுகளின் தொகைகளைக் காணலாம். மூன்றுவது வரிசையில் 1976 - 77இல் எதிர்பார்க்கின்ற வரவு களும், செலவுகளும் குறிக்கப்பட்டிருக்கும். இப்படி மூன்று ஆண்டுகளின் வரவுகளையும் செலவுகளையும் தருவதால் அவற்றை ஒப்பிட்டுப் பார்த்து, அவற்றின் போக்கினைத் தெளிவாகப் புரிந்துகொள்ள இயல் கின்றது.

நமது நாட்டின் வரவு - செலவுத் திட்டத்தை இரு பிரிவுகளாகப் பகுத்து வெளியிடுகின்றனர். முதல் பகுதியை நிதி வரவு செலவுத் திட்டம் (Revenue Budget)

என்று கூறுகின்றோம். இரண்டாம் பகுதி முதலாக்க வரவு செலவுத் திட்டமாகும் (Capital Budget).

நிதி வரவு - செலவுத் திட்டத்தில் வரி வருவாய்களும் அரசின் தொழில் துறைகளிலிருந்து கிடைக்கின்ற ஆதாயம் போன்ற வரவினங்களும், இந்த வருவாய்களைப் பெற ஏற்படக்கூடிய செலவுகளும் இடம் பெறுகின்றன.

முதலாக்க வரவு - செலவுத் திட்டத்தில் அரசின் முதலீட்டுச் செலவுகளை (Capital Expenditure) எல்லாம் குறிப்பிடுகின்றனர். இத்தகைய செலவுகளுக்குப் பெறுகின்ற கடன்போன்ற வரவினங்களை இந்தப் பகுதியிற் காணலாம்.

இந்திய அரசின் கணக்குகளை இரண்டு பெருந் தலைப்புகளின்கீழ் வைக்கின்றனர். முதலாவது, இந்தியத் தொகுப்பு நிதி (Consolidated Fund of India) இரண்டாவது, இந்தியப் பொதுக்கணக்கு (Public Account of India).

நடுவண அரசுக்கு வருகின்ற வருவாய்களையும், கிடைக்கின்ற கடன்களையும், கொடுத்துத் திரும்பி வரும் கடன்களையும் தொகுப்பு நிதிக் கணக்கில் வைக்கின்றனர். தொகுப்பு நிதியில் இருக்கின்ற பணத்தை நாடாளுமன்றத்தின் சட்டத்தின் மூலமாகத் தான் எடுத்துப் பயன்படுத்த முடியும்.

மற்றைய வருமானங்களை எல்லாம் பொதுக் கணக்கில் சேர்க்கின்றனர். பொதுக்கணக்கில் சேரும் பணத்திற்கு எடுத்துக்காட்டாக அரசின் பல்வேறு பணிகளுக்குக் கிடைக்கின்ற வருவாயைக் கூறலாம்.

பொதுக்கணக்கிலுள்ள பணத்தை எடுத்துச் செலவிட நாடாளுமன்றத்தின் ஒப்புதல் தேவை இல்லை.

எதிர்பாராத செலவுகளுக்குப் பயன்படுத்துவதற்காக ஒரு தனி நிதியை (Contingency Fund) ஏற்படுத்தியுள்ளனர். இதிலிருந்து சில்லறைச் செலவுகளையும் பிறவற்றையும் மேற்கொள்கின்றனர்.

அரசின் பொது வரவு - செலவுத் திட்டத்தில் இருப்புப் பாதையின் வரவுகளும், செலவுகளும் வருவதில்லை. இந்திய அரசின் மிகப் பெரிய பொதுத்துறையான இருப்புப்பாதைப் போக்குவரத்துக்குத் தனியாக வரவு - செலவுத் திட்டம் தீட்டி, நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறுகின்றனர்.

**1976-77ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டம் :** இந்திய அரசின் நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் நடப்பு (1976 77) ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தை 15-3-76இல் நாடாளுமன்றத்தில் அளித்தார். அந்தத் திட்டத்தை எடுத்துக்காட்டாக வைத்துக்கொண்டு இந்திய அரசின் வரவு - செலவுத் திட்டத்தைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் அளித்து நிதியமைச்சர் ஆற்றுகின்ற உரை மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். அந்த உரையில் அரசின் நிதிக்கொள்கை வெளிப்படும். வருங்காலத்தில் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளின் போக்கைக் கோடிட்டுக் காட்டுவதாக நிதியமைச்சரின் உரை அமையும்.

*1976-77* ஆம் ஆண்டின் இந்திய அரசின் வரவு - செலவுத் திட்டம்:—

(ரூபாய் கோடிக் கணக்கில்)

| | 1975 76 (திட்டம்) | 1975 76 திருத்தப் பெற்றது) | 1976-77 |
|---|---|---|---|
| வரவினக் கணக்கு (Revenue Account) | | | |
| வரவுகள் (Receipts) | *7,092* | *8,023* | *8,179* |
| செலவுகள் (Expenditure) | *6,491* | *7,117* | *7,690* |
| எச்ச வரவு (Surplus) | (+) *601* | (+) *906* | (+) *489* |
| முதலாக்கக் கணக்கு (Capital Account) | | | |
| வரவுகள் | *3,429* | *4,130* | *4,423* |
| செலவுகள் | *4,277* | *5,526* | *5,280* |
| பற்றுக்குறை (Deficit) | (-) *848* | (-)*1,396* | (-) *857* |
| மொத்தப் பற்றுக்குறை | *247* | *490* | *368* |

*1976-77* ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தை மேற்போக்காகப் படிக்கின்றவர்களின் மனத்தில் சில கருத்துகள் தோன்றலாம். தொடர்ந்து செலவுகள் கூடிவருகின்றன. வரவினக் கணக்கில் எச்சமாக வருவாய் இருக்கின்றது. ஆனால், முதலாக்கக்

கணக்கில் வரவுகளைவிடச்செலவுகள் மிகவும் மிகுதியாக இருப்பதால், பற்றுக்குறையின் அளவு கூடுதலாக உள்ளது.

1976-77ஆம் ஆண்டில் மொத்தப் பற்றுக்குறை 368 கோடி ரூபாய். வரவு - செலவுத் திட்டத்தின் விளைவாக 48 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் கிடைக்குமென்று மதிப்பிட்டு, மொத்தத்தில் 320கோடி ரூபாய் பற்றுக்குறை இருக்குமென்று நிதியமைச்சர் அறிவித்துள்ளார்.

புதிய வரிகளின் மூலமாக 80 கோடி ரூபாய் கிடைக்குமென்று கணக்கிடப்பட்டுளது.

**வரிகள் :** நடுவண அரசின் வருவாயில் குறிப்பிடத் தக்கதாக இருப்பது வரிகளின் மூலம் கிடைக்கின்ற வருவாயாகும். அரசு விதிக்கின்ற வரிகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று நேர்முக வரிகள் (Direct Taxes). இரண்டு, மறைமுக வரிகள் (Indirect Taxes), நேர்முக வரிகளைச் செலுத்துபவர்கள் உணர் வார்கள். எடுத்துக்காட்டாக வருமான வரியைக் கூறலாம். மறைமுக வரியைச் செலுத்துபவர்கள் நேரடியாக அறிந்தோ, உணர்ந்தோ இருப்பதில்லை. திரைப்படத்திற்குச் செல்பவர்கள் செலுத்துகின்ற நுழைவுக் கட்டணத்தின் வரியும் சேர்ந்திருக்கின்றது. ஆனால், பெரும்பாலானவர்கள் அதனை அறிந்திருப்ப தில்லை.

அரசுக்குக் கிடைக்கின்ற வரிகளில் தலையாய சில வற்றைப்பற்றி விவரமாகக் கூறலாம்.

நேர்முக வரிகளில் ஒன்றான **வருமான வரியை** (Income Tax) முதன் முதலில் 1860இல் விதித்தனர். ஆனால் 1886ஆம் ஆண்டிலேதான் வரவு - செலவுத் திட்டத்தில் வருமானவரிக்கு நிலையான இடம் கிடைத்தது. கடந்த காலத்தில் வருமானவரி விதிப்பு முறையில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தொடக்க காலத்தில் ஒரே விகிதத்தில் தொடர்ச்சி முறையில் (Step System) வருமான வரி அமைந்தது. பின்னால் வருமானத்தின் அளவு நிலைகளை ஒட்டித் தொகுதி முறையில் (Slab System) வருமான வரி விதிக்கப்பட்டது. வருவாயின் கீழ்நிலை அளவிற்கு வரிவிலக்கு வழங்கினர். மிகுதியான வருவாய் அளவில் "மேல் வரியும்" (Super Tax), "வரிமேல் வரியும்" (Surcharge) விதிக்கத் தொடங்கினர்.

வருமானவரி விதிப்பதில் வேறு சிலவற்றையும் கவனிக்கின்றனர். தனியாள் வருமானம், கூட்டுக் குடும்ப வருமானம், பொது நிறுவன வருமானம் என்று பலவாறாகப் பகுத்து, ஒவ்வொரு வகை வருவாய்க்கும் ஒரு வகையில் வரி விதிக்கப்பெறுகின்றது வருவாய் கூடக்கூட வருமான வரியும் வளர்ந்துசெல் விழுக்காட்டில் (Progressive Rate) கூடுகின்றது.

1976-77ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டப்படி ஒருவரின் வருவாயில் முதல் எட்டாயிரம் ரூபாய்க்கு வரி இல்லை. முந்திய ஆண்டு விதித்த வருமான வரி விகிதம் இந்த ஆண்டில் குறைந்திருக்கின்றது. சென்ற ஆண்டு வருமான வரியும் இப்பொழுதுள்ள வருமான வரியும் எப்படி அமைந்திருக்கின்றதென்பதை அடுத்த பக்கம் பட்டியல் காட்டுகின்றது :—

| வருவாய் அளவு (ரூபாய்) | 1975—76 மேல்நிலை வரி சேர்த்து மொத்த வரி (ரூபாய்) | 1976 – 77 மேல்நிலை வரி சேர்த்து மொத்த வருமானவரி (ரூ) | முந்திய ஆண்டை விட வருமான வரியில் குறைவு (ரூபாய்) |
|---|---|---|---|
| 8 000 | — | — | — |
| 10,000 | 374 | 330 | 44 |
| 15,000 | 1,309 | 1,155 | 154 |
| 20 000 | 2,409 | 2,145 | 264 |
| 25,000 | 4,059 | 3,520 | 539 |
| 50,000 | 17,259 | 13,970 | 3,289 |
| 10 0 000 | 53,559 | 43,120 | 10,439 |
| 2,00 000 | 1,30559 | 1,09,120 | 21,439 |
| 3,00,000 | 2,07,559 | 1,75,120 | 32,439 |

1975-76 இல் கூடுதல் நிலையில் வருவாயில் 77 விழுக்காடு வருமான வரியாகச் செலுத்தவேண்டிய திருந்தது. இப்பொழுது வருமான வரியின் உச்ச அளவை 66 விழுக்காடாகக் குறைத்திருக்கின்றனர். இதனுல் தனியாருக்கு வருவாய் தேடத் தூண்டுதல் கிடைத்திருக்கின்றதென்று கருதுகின்றனர்.

நேர்முக வரிகளில் மற்றொன்று சொத்து வரியாகும். (Wealth Tax) செல்வத்தின் மீதான இந்த வரியை 1957 ஆம் ஆண்டில் முதன்முதலில் திரு.டி.டி. கிருட்டிண

மாச்சாரி விதித்தார். ஓர் இலட்சம் ரூபாய்க்குமேல் சொத்து வைத்திருப்பவர்கள் ஆண்டுதோறும் வரி கட்ட வேண்டும். 1976-77ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டம் கீழ்க்கண்ட முறையில் செல்வத்தின் மீது வரிவிதிக்கப்படுகின்றது.

| சொத்தின் அளவு | வரி வீதம் |
|---|---|
| முதல் ஓர் இலட்சம் ரூபாய் | வரி இல்லை |
| ரூ. 1,00,001 முதல் ரூ. 5,00,000 வரை | 0·5% |
| ரூ. 5,00,001 முதல் ரூ. 10,00,000 வரை | 1·5% |
| ரூ. 10 00,001 முதல் ரூ. 15,00,000 வரை | 2·0% |
| ரூ. 15,00,000 மேல் | 2·5% |

வருமான வரியையும் சொத்து வரியையும் நாட்டில் காணப்படுகின்ற ஏழை - செல்வர் ஏற்றத்தாழ்வைக் குறைக்கும் நோக்கத்தோடும், மிகுதியான வருவாய் உள்ளவர்களுக்கு வரி செலுத்தும் ஆற்றல் கூடுதலாக இருப்பதால் அவர்களிடமிருந்த மிகுந்து வரி வாங்கலா மென்ற அடிப்படையிலும் வளர்வீத (Growth Rate) விகிதத்தில் விதிக்கின்றனர்.

“இறப்பு வரி” அல்லது “பண்ணை வரி” (Estate Duty), “அன்பளிப்புவரி” (Gift Tax) போன்று வேறுபல நேர்முக வரிகளும் விதிக்கின்றனர். 1958 ஏப்ரல் முதல் 1963 மார்ச்சு வரை “செலவு வரி” (Expenditure Tax) விதித்தனர். பின்னால் இதனை நீக்கிவிட்டனர்.

அரசுக்குக் கிடைக்கும் மறைமுக வரி வருவாய் களில் தலையாயவை பண்ட வரிகளாகும் (Commodity Taxations). உள்நாட்டில் உண்டு பண்ணும் பெரும் பாலான பொருள்களின்மீது வரி விதிக்கின்ற உரிமை இந்திய அரசிடம் இருக்கின்றது. இவற்றின் மீது விதிக்கப்படுகின்ற வரிகளை "ஆயத்தீர்வைகள்" (Excise Duties) என்கின்றோம். சர்க்கரை, பருத்தி, ஆலைத்துணி, புகையிலை, தீப்பெட்டி, சிமெண்டு ஆகிய பொருள்களின்மீது விதிக்கும் ஆயத்தீர்வைகளின் மூலம் அரசுக்கு நல்ல வருவாய் கிடைக்கின்றது.

இறக்குமதி, ஏற்றுமதிப் பொருள்களின் மீது விதிக்கின்ற வரிகளை "சுங்க வரிகள்" (Customs Duties) என்கிறோம். ஏற்றுமதி வரிகளைவிட இறக்குமதி வரி களே மிகுதியான வருவாயைத் தருகின்றன. தற்காலத் தில் ஏற்றுமதி வாணிபத்தை ஊக்குவிக்கும் நோக்கில், ஏற்றுமதி வரிகளைக் குறைக்கின்ற போக்குக் காணப் படுகின்றது.

ஒவ்வொரு வரவு - செலவுத் திட்டத்திலும் அரசின் வருவாய்களைக் கூட்டுவதில் நிதியமைச்சர் மிகவும் கவனமாக இருப்பார். நாடாளுமன்றம், அரசு விதிக்கும் புதிய வரிகள் மக்களின் நலனைப் பாதிக்கா மலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் போக்கிற்குத் தடைசெய்யாமலும் இருக்கின்றனவா வென்பதைக் கவனிக்கின்றது. அரசின் செலவுகள் ஆண்டுக்கு ஆண்டு கூடுவதால், வருவாயைப் பல வழிகளிலும் கூட்ட வேண்டியது அரசின் தவிர்க்க முடியாத பொறுப்பா கின்றது. எவ்வளவு வருவாய் கூடினாலும் அரசின் மொத்தச் செலவை ஈடுகட்ட இயலாத பற்றுக்குறை நிலை தொடர்ந்து வருவதை மறந்துவிடக்கூடாது.

**செலவினங்கள் :** நடுவண அரசின் செலவுகள் விரைந்து வளர்கின்றன. நாடு விடுதலை பெற்ற பிறகு அரசு மேற்கொள்கின்ற பணிகள் பெருகியுள்ளன. மக்களின் நலனைக் கட்டிக் காக்கவும், வளர்க்கவும் வேண்டிய எல்லாவற்றையும் அரசு செய்ய வேண்டியுள்ளது. நாட்டு மக்களுக்கு வளமான புதிய வாழ்க்கையை வழங்கி வந்த ஐந்தாண்டுத் திட்டங்களைச் செயல்படுத்த அரசு நிறையப் பணத்தைச் செலவிடுகின்றது.

1950 - 51ஆம் ஆண்டில் இந்திய அரசின் பொதுச் செலவு (Revenue Expenditure) 346 கோடி ரூபாயாக இருந்தது. 1976 - 77ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் இஃது 7,690 கோடி ரூபாயாக இருக்குமென்று மதிப்பிட்டுள்ளனர். இதிலிருந்து அரசின் செலவுத் தொகை எப்படி மிக விரைவாக வளர்ந்திருக்கின்றதென்பதை அறியலாம்.

நடுவண அரசின் செலவினங்களைப் பாதுகாப்புச் செலவு, நிர்வாகச் செலவு, கடன் தொடர்பான செலவு, சமுதாய வளர்ச்சிச் செலவுகள், முதலாக்கத் தொடர்பானவை, பிற என்று பிரித்துப் பார்க்கலாம்.

நடுவண அரசின் செலவினங்களில் மிகப் பெரிய தனிச் செலவினமாக இருப்பது பாதுகாப்புச் செலவாகும். கடந்த காலத்தில் பாதுகாப்புச் செலவு மிகவும் பெருகியிருக்கின்றது. 1961 - 62ஆம் ஆண்டில் 289·94 கோடி ரூபாயாக இருந்த பாதுகாப்புச் செலவு 1971 - 72ஆம் ஆண்டில் 1079 கோடியாக உயர்ந்தது.

அரசின் பணிகள் பெருகப் பெருக அரசில் பணியாற்றுகின்றவர்களின் எண்ணிக்கை கூடுகின்றது.

முன்பிருந்த துறைகள் விரிவாக்கம் பெற்றிருக்கின்றன. புதுப் புதுத் துறைகள் தோன்றுகின்றன. இவற்றால் அரசின் நிர்வாகச் செலவுகள் ஆண்டுக்கு ஆண்டு மிகுதிப்படுகின்றன. வரவு-செலவுத் திட்டத்தில் விலை ஏற்றத்திற்கேற்ப ஊழியர்களின் ஊதிய உயர்வுக்கும் வழி செய்ய வேண்டியுள்ளது.

தற்காலத்தில் அரசு பல பொதுநலப் பணிகளை மேற்கொள்கின்றது. மக்களின் கல்வி வளர்ச்சி, மருத்துவ வாய்ப்புகள், அல்லற்படுபவர்களின் மறு வாழ்வுப் பணிகள், பெண்கள் முன்னேற்றத்திற்கான ஆக்கத் திட்டங்கள் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டியதிருக்கின்றது. குறிப்பாக வாழ்க்கையில் கீழ்நிலையில் உள்ளவர்களுக்குத் துணை செய்யக் கூடிய பணிகளுக்கு மேலும் மேலும் செலவிட வேண்டியுள்ளது.

நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்காகச் சில முன்னோடிப் பணிகளில் அரசு கவனம் செலுத்த வேண்டியது தேவையாகும். எடுத்துக்காட்டாக, பல துறைகளிலும் நடைபெறும் அறிவியல் ஆராய்ச்சிகளைக் கூறலாம்.

அரசு வேறு பலவற்றிற்காகவும் பணத்தைச் செல விடுகின்றது. அரசு வாங்கியுள்ள கடனுக்கு வட்டி செலுத்த வேண்டும். உரிய காலத்தில் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். மாநிலங்களின் சில வகைச் செலவுகளுக்கு நடுவண அரசு மானியம் கொடுக்கின்றது. மாநிலங்களின் ஆக்கப் பணிகளுக்குத் துணை செய்யும் பொறுப்பும் இருக்கின்றது.

நடுவண அரசின் முதலாக்கச் செலவுகளில் இருப்புப்பாதை, வான்வழிப் போக்குவரத்து, அஞ்சல் - தந்தித் துறை, நீர்ப்பாசனம், பல்நோக்குத் திட்டங்கள் தொடர்பானவை எல்லாம் இடம் பெறுகின்றன. இவை பற்றிய விளக்கக் குறிப்புகள் வரவு - செலவுத் திட்டத்தின் அறிக்கையில் இடம் பெற்றிருக்கும்.

**நடுவண அரசும் மாநில அரசுகளும்:** நடுவண அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் உள்ள நிதித் தொடர்புகளுக்கும் நடுவண அரசின் வரவு - செலவுத் திட்டத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. இந்திய அரசியல் சட்டம் நடுவண, மாநில அரசுகள் எவற்றின் மீது வரிவிதிக்கலா மென்பதைத் தெளிவாகவரையறுத்துக் கூறுகின்றது.

நடுவண அரசு விதிக்கின்ற வரிகளை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். முதலாவது, நடுவண அரசு விதித்து, வாங்கி, எல்லாவற்றையும் நடுவண அரசு வைத்துக் கொள்கின்ற வரிகள். இரண்டாவது, நடுவண அரசு சிலவரிகளை விதிக்கின்றது. அவற்றின் வருவாயை நடுவண அரசும், மாநில அரசுகளும் குறிப்பிட்ட அளவில் பங்கிட்டுக் கொள்கின்றன. மூன்றாவதாக, சில வரிகளை நடுவண அரசு விதித்து, மக்களிடமிருந்து வாங்கவும் செய்கின்றது. ஆனால், அந்த வரிகளின்மூலம் கிடைக்கின்ற மொத்தவருமானத்தையும் மாநில அரசுகளுக்கு அளித்துவிடுகின்றது. நான்காவதாக, சில வரிகளை நடுவண அரசு விதிக்கின்றது. ஆனால், அவற்றை மாநில அரசுகளே மக்களிடமிருந்து வாங்கி வைத்துக்கொள்கின்றன.

**வரி விதிக்கும் உரிமை:** இந்தியக் குடியரசின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஏழாவது பிரிவின்

முதல் பட்டியலில் நடுவண அரசு விதிக்கக் கூடிய வரிகளைக் குறிப்பிட்டுள்ளனர். அவற்றைத் தொகுத்துக் கூறலாம்.

1. வேளாண்மை வருவாய் தவிரப் பிற வருவாய் களின்மீது விதிக்கக் கூடிய வரிகள்.
2. பொது நிறுவனங்களின் (Corporation) வரிகள்.
3. சுங்க வரிகள்.
4. போதையூட்டும் மதுவகைகள், மயக்கந்தரும் மருந்துகள் போன்றவற்றின் மீது விதிக்கக் கூடிய வரிகள்.
5. வேளாண்மை நிலம் தவிரப் பிறவற்றின் மீது விதிக்கும் இறப்பு வரி (Death Duty), வாரிசு வரி (Succession Duty) ஆகியவை.
6. நிலம் தவிரப் பிற சொத்துகளின் முதல் (Capital) மதிப்பின் மீதான வரிகள்.
7. நிதித்தொடர்பான ஆவணங்களின் (பத்திரங் களின்) மீதான முத்திரைகளை ஒட்டிய தீர்வைகள்.
8. பங்குகளை (Shares) விற்பதன்மீதோ வாங்கு வதன்மீதோ விதிக்கும் வரிகள்.
9. செய்தித் தாள்களை வாங்குதல், விற்றல் ஆகிய வற்றின் மீதான வரிகள்.
10. இருப்புப் பாதைப் போக்கு வரத்துக் கட்டணம். பொருள்களை ஏற்றிச்செல்வதற் குரிய கட்டணம் ஆகியவை மீதான வரிகள்.

11. புகைவண்டி, கப்பல், வானூர்தி ஆகியவை கொண்டுசெல்லும் பயணிகளின் பொருள்கள் மீதான திருப்புமுனை வரிகள்.

12. மாநிலங்களுக்கிடையில் நடைபெறும் வாணிபப் பொருள்களின்மீது விதிக்கக் கூடிய வரிகள்.

மாநில அரசுகள் எவற்றின்மீது வரி விதிக்கலா மென்பதையும் அரசியல் அமைப்புச்சட்டம் வரையறுத் திருக்கின்றது.

**ஆற்றல் மிக்க திட்டம் :** நடுவண அரசின் வரவு - செலவுத் திட்டம் மிகவும் ஆற்றல் மிக்கதாகும். அதனுல் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவோ வளர்க்கவோ முடியும். அரசு பற்றுக்குறையுடைய திட்டம் தீட்டினுல் அதனுல் நாட்டில் பணவீக்கம் ஏற்படும். பலவற்றின்மீதும் புதிய வரிகளை விதித்தால் மக்களுக்குத் தொழிலைத் தொடங்கி நடத்துவதிலுள்ள ஊக்கம் குறையும்.

கடந்த சில ஆண்டுகளில் தீட்டப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தைவிட 1976 – 77ஆம் ஆண்டிற்குத் தீட்டிய வரவு - செலவுத் திட்டத்தை மிகவும் சிறந்ததெனப் போற்றுகின்றனர். நாட்டின் நடப்பினை நன்கு ஆராய்ந்து, இருக்கின்ற பொருளாதாரச் சீர் கேடுகளைச் செப்பனிடும் வகையிலும், பொருளாதார வளர்ச்சிக்கு ஆக்கந்தரும் முறையிலும் வரவு - செலவுத் திட்டம் தீட்டப்பட்டிருக்கின்றது.

1976-77ஆம் ஆண்டின் வளர்ச்சித் திட்டத்திற்குத் தேவையான அளவு பணம் ஒதுக்கியுள்ளனர். குறைந்த வருவாய் உள்ளவர்களின் வருமானம் கூடுமென்று

எதிர்பார்க்கின்றனர். ஏழை எளியவர்களின் தேவைப் பொருள்களின் விலை கூடாமல் இருக்க, தக்க தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வழிவகுத்துள்ளனர்.

பொதுவாக, இந்த ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் மிகுதியாகத் துண்டு விழுமென்று எதிர் பார்த்தனர். ஆனால், மொத்தத்தில் பற்றுக்குறை 368 கோடி ரூபாயாக இருக்குமளவில் திட்டமிட்டு, மேலும் அதனில் 48 கோடி ரூபாயைக் குறைக்க வழி வகுத்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும். வருமான வரியில் செய்திருக்கின்ற சில மாற்றங்களினால் தனியார் துறையினருக்கு ஊக்கம் உண்டாகுமென்று கருதலாம்.

ஒவ்வோர் ஆண்டும் நடுவண அரசு வரவு - செலவுத் திட்டத்தை வெளியிடுகின்ற பொழுது நாட்டு மக்களெல்லாம் புதிய நம்பிக்கையோடு அதனை எதிர்பார்க்கின்றனர். அரசின் ஊழியர்கள் ஊதிய உயர் வுக்கு வழியுள்ளதாவெனக் கவனிக்கின்றனர். ஏழை எளியவர்கள் தங்களுக்கு வேலை வாய்ப்புகள் பெருகவும் நுகர் பொருள்களின் விலைகளைக் குறைக்கவும் அரசு மேற்கொள்ளப்போகின்ற நடவடிக்கைகளை அறிய ஆவலோடு காத்திருக்கின்றனர். செல்வர்கள் புதிய வரிகள் தங்களைப் பாதிக்குமோவென்ற எண்ணத்தோடு வரவு - செலவுத்திட்டத்தில் கவனம் செலுத்து கின்றனர்.

அரசின் வரவு - செலவுத் திட்டம் மக்களின் நடவடிக்கைகளை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் ஊக்குவிக்கவோ கட்டுப்படுத்தவோ செய்கின்றது. புதிய தொழில்களைத் தொடங்க அரசு மானியம் வழங்கவும், வரிவிலக்கு அளிக்கவும் திட்டத்தில் வகை செய்திருக்

தால் ஆர்வமும் ஆற்றலும் உடையவர்கள் புதிய தொழில்களைத் தொடங்குவார்கள். தொழில் வளர்ச்சி ஏற்படும். வருவாய்மீது விதிக்கின்ற வரிகளில் சேமிப்புக்கு விதிவிலக்குக் கொடுத்தால் நாட்டில் முதலாக்கம் பெருகும்.

வரவு - செலவுத் திட்டத்தில் கடுமையான முறையில் வரிகள் விதித்தால் பொருளாதார வளர்ச்சி தடைப்படும். விற்பனை வரிகளுக்கும் பொது மக்களின் செலவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஒரு பொருளின்மீது மிகுதியாக வரி விதிக்கப்பட்டால் அந்தப் பொருளின் விலை கூடும். அந்தப் பொருளின் விற்பனை குறையும். இதனால் அதனோடு தொடர்புடைய பொருள்களின் தோற்றமும், விற்பனையும் தடைப்படலாம். சான்றாக, பெட்ரோலின்மீது கூடுதல் வரி விதித்ததால் உந்து வண்டிகளின் (Cars) விற்பனை தடைப்பட்டதைக் கூறலாம். கவனமாக வரவு - செலவுத் திட்டத்தைத் தீட்டினால் மக்களின் நடவடிக்கைகளில் சிறந்த விளைவுகளை எதிர்பார்க்கலாம்.

ஒரு நாட்டின் வரவு - செலவுத் திட்டம் அந்த நாட்டு மக்களின் பொருளாதார நடவடிக்கைகளோடு நேரடியாகத் தொடர்பு கொண்டிருக்கின்றது. இதனால், ஒவ்வோர் ஆண்டும் வரவு - செலவுத் திட்டம் வெளியாவதைப் பல நிலை மக்களும் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர். வரவு - செலவுத் திட்டத்தில் வெளியிடுகின்ற வரிகளைப் பற்றியும், பிற நிதி நடவடிக்கைகளைப் பற்றியும் பொது மக்களும், வணிகர்களும், தொழில்களை நடத்துகின்றவர்களும், பொருளியலறிஞர்களும் தங்களுடைய கருத்துகளை எடுத்துக் கூறுகின்றனர்.

சிறந்த நிதியமைச்சர்கள் பொது மக்கள் கூறுகின்ற கருத்துகளைக் கேட்டு, நாட்டின் பொருள் வளத்தையும், மக்கள் நலனையும் மனத்தில் கொண்டு, தேவையானால் வரி விதிப்பில் சில மாறுதல்களைச் செய்கின்றனர். இந்த ஆண்டில், நடுவண அரசின் வரவு - செலவுத் திட்டம் வெளியானவுடன், அதனைப் பற்றிய கருத்துகளைப் பலரும் கூறினர். சில வரிகள் தனியார் நுகர்வையும், சேமிப்பையும், முதலீட்டையும் மிகவும் கட்டுப்படுத்து மென்றும், இதனால் பொருளாதார வளர்ச்சி தடைப் படுமென்றும் சுட்டிக் காட்டப்பெற்றது. இதனை ஒட்டி நிதிஅமைச்சர் சில வரிவிலக்குகளையும், சலுகை களையும் அறிவித்தார். இப்படிச் சில ஆண்டுகளில் ஏற்படுவதனைக் காணலாம்.

நடுவண அரசின் வரவு - செலவுத் திட்டம் நமது வாழ்வோடு தொடர்பு கொண்டிருப்பதால் ஒவ்வோர் ஆண்டும் அது வெளிவரும்பொழுது படித்துத் தெரிந்து கொள்வது நமது கடமையாகும்.

## 5 தமிழக அரசின் வரவு - செலவுத் திட்டம்

இந்தியக் குடியரசை ஒரு மிகப் பெரிய ஆலமரத்தோடு ஒப்பிடலாம். பரந்து, விரிந்து ஒரு பெரிய ஆயிரக்கால் மண்டபம் போல உயர்ந்து வளர்ந்து நிற்கும் ஆலமரத்தை ஊன்றிக் கவனித்தால் சில உண்மைகள் விளங்கும்.

ஆலமரத்தின் ஒவ்வொரு கிளையிலிருந்தும் விழுதுகள் இறங்கியிருக்கும். சில விழுதுகள் தரையைத் தொட்டு, பின் பூமியைப் பிளந்து சென்று வேரூன்றியிருக்கும். காலப்போக்கில் அடிமரத்தைப் போன்றே வளர்ந்து உறுதியுடன் விளங்கும் விழுதுகள் இருக்கும். மேற்போக்காகப் பார்ப்பவர்களுக்கு ஒவ்வொரு விழுதும் ஒரு மரம்போலத் தோன்றும். ஆனல், மரத்தை முழுமையாகப் பார்ப்பவர்களுக்கு அவை எல்லாம் ஓரேயொரு மரத்தின் விழுதுகள் என்பது விளங்கும்.

கூட்டரசான இந்தியா ஒரு பெரிய ஆலமரம் என்ருல் மாநிலங்களை அந்த மரத்தின் விழுதுகள் என்று கூறலாம். தனித்தனியாகப் பலவற்றில் செயல்படுகின்ற மாநிலங்கள் அடிப்படையில் நடுவண அரசைச் சார்ந்திருக்கின்றன. மரத்துக்கு ஆற்றலை விழுதுகளும் விழுதுகளுக்கு ஆற்றலை மரமும் தருவது போல, இந்திய அரசுக்கு மாநில அரசுகளும், மாநில அரசுகளுக்கு இந்திய அரசும் உறுதுணையாக உள்ளன.

**தனி வரவு - செலவுத் திட்டம்:** ஒவ்வொரு மாநில அரசும் தனியாக வரவு - செலவுத் திட்டத்தைத்

தீட்டிக்கொண்டு செயல்படுகின்றது. மாநில நிதி அமைச்சர் வரவு - செலவுத் திட்டத்தை வரைந்து சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெறுகின்றார்.

மாநில அரசுகளுக்குத் தனியாகச் சில வரிகளை விதிக்கும் உரிமைகளும், வருவாய்களைப் பெற வாய்ப்புகளும், சில பணிகளை நிறைவேற்றும் கடமைகளும் உள்ளன. நடுவண அரசு என்ற பெரிய வட்டத்திற்குள் சுழல்கின்ற சிறிய வட்டங்களாக மாநில அரசுகள் உள்ளன.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஏழாவது பிரிவிலுள்ள இரண்டாவது பட்டியல் மாநில அரசுகள் எந்தெந்த வரிகளை விதிக்கலாமென்பதை வரையறுத்துக் கூறுகின்றது. அத்தகைய வரிகளை இங்கே தொகுத்துக் கூறலாம்.

1. நிலத்தின்மீது விதிக்கப்படும் வரிகள்.
2. செய்தித் தாள்கள் தவிரப் பிற பொருள்களை வாங்கல், விற்றல் ஆகியவற்றின் மீதான வரிகள்.
3. வேளாண்மை வருமான வரிகள்.
4. நிலம், கட்டிடங்களின் மீதுள்ள வரிகள்.
5. வேளாண்மை நிலம் தொடர்பான வாரிசு உரிமை வரி, சிறப்பு வரி.
6. போதையளிக்கும் மது வகைகள், மயக்க மருந்துகள் போன்றவற்றின்மீது விதிக்கின்ற ஆயத்தீர்வைகள்.
7. மாநிலத்திற்குள் வருகின்ற பொருள்களின் மீது விதிக்கும் வரிகள்.

8. கனிப் பொருள்கள் உரிமைகளின்மீது (Mineral Rights) விதிக்கும் வரிகள்.
9. மின் சக்தி நுகர்வு, விற்பனை ஆகியவற்றின் மீதான வரிகள்.
10. வண்டிகள், கால்நடைகள், படகுகள் ஆகிய வற்றின்மீது விதிக்கப்படும் வரிகள்.
11. நிதிப் பத்திரங்கள் தவிரப் பிறவற்றின் மீதான முத்திரைப் பத்திரத் தீர்வைகள்.
12. சாலைகள் அல்லது படகுப் போக்குவரத்திற் கேற்ற உள்நாட்டுக் கால்வாய்களின் வழி யாகச் சுமந்து செல்லப்படும் பொருள்கள் பயணிகள் மீதான வரிகள்.
13. களியாட்டங்கள் (Entertaiments), பந்தயம், சூதாட்டம் போன்றவற்றை உள்ளடக்கிய ஆடம்பர நடவடிக்கைகள், பொருள்களின் மீதுள்ள வரிகள்.
14. சாலைச் சுரங்கங்கள் (Tolls).
15. பணிகள், வாணிபம், வேலைக்கமர்த்தல் தொடர்பானவற்றின்மீதுள்ள வரிகள்.
16. தலை வரிகள் (Capitation Taxes).
17. செய்தித் தாள்களிலுள்ள விளம்பரங்கள் தவிர, பிற விளம்பரங்களின்மீதான வரிகள்.

மாநில அரசுகள் தங்களுக்குக் கிடைக்கும் வரி வருவாயோடுகூட நடுவண அரசிடமிருந்து அதனுடைய வரிகளில் ஒரு பகுதியையும், சிலவற்றிற்கு மானிய மாகவும் பணம் பெறுகின்றது. இவை தவிரக் கடனாகவும் நிதி பெறுகின்றது.

மாநில அரசுகள் நிர்வாகச் செலவுகளோடுகூட வேறு பல செலவுகளையும் செய்கின்றது. மாநில மக்களின் பொதுநலனை வளர்க்கக் கூடிய கல்வி, மருத்துவம், பொதுத் துப்புரவு, குடிதண்ணீர், குடியிருப்பு வசதிகள் போன்றவற்றை மாநில அரசுகள் கவனிக்கின்றன. வேளாண்மை, கால்நடை, தொழில், போக்குவரத்து போன்ற பொருளாதார ஆக்க வளர்ச்சிக்கான பணிகளுக்கும் நிறையப் பணம் செலவிடுகின்றன. நடுவண அரசைப் போன்றே மாநில அரசுகளின் செலவுகளும் தற்காலத்தில் கூடி வருகின்றன.

**தமிழக அரசின் வரவு - செலவுத்திட்டம்:** எல்லா மாநிலங்களையும்போலத் தமிழக அரசும் செயல்பட்டு வருகின்றது. ஒவ்வோர் ஆண்டும் தமிழக அரசின் வரவு-செலவுத்திட்டத்தைத் தமிழக நிதியமைச்சர் உருவாக்கியபின், தமிழகச் சட்டமன்றம் ஏற்றுக்கொண்டு செயல்படுத்துகின்றது. இந்த ஆண்டில் (1976-77) புதியதொரு சூழ்நிலை உருவாகியது. 1976 பிப்ரவரி முதல் தமிழகம் இந்தியக் குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சியின்கீழ் வந்தது. இதனால் இந்த ஆண்டின் தமிழக வரவு - செலவுத் திட்டத்தை நடுவண அரசின் நிதியமைச்சர் நாடாளுமன்றத்தில் அளித்து, பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்றார்.

தமிழக அரசின் வரவு - செலவுத் திட்டத்தை விரிவாகவும், விளக்கமாகவும் பார்ப்பதன் மூலம் பொதுவாக மாநில அரசுகளின் வரவு - செலவுத் திட்டம் எப்படி அமைகின்றதென்பதை அறிந்துகொள்ளலாம்.

(ரூபாய் கோடிக் கணக்கில்)

| | 1974—75 கணக்குகளின் படி | 1975—76 திட்ட மதிப்பு | 1975—76 திருத்தப்பெற்ற மதிப்பீடு | 1976—77 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| I தொகுப்பு நிதி (Consolidated Fund) | | | | |
| நிதி வரவுகள் (Revenue) | 520·29 | 501·37 | 552·80 | 575·63 |
| செலவினங்கள் | 528·36 | 537·49 | 560·56 | 587·95 |
| பற்றுக்குறை | — 8·07 | —36·12 | —7·76 | —12·32 |
| முதலின வருவாய் | 92·33 | 178·50 | 222 53 | 286·84 |
| செலவினங்கள் | 133·85 | 205·58 | 260.27 | 321·99 |
| முதலினக் கணக்கில் பற்றுக்குறை | —41·52 | —27·08 | —37 74 | —35·15 |
| தொகுப்பு நிதியின் மொத்தப் பற்றுக்குறை | —49·59 | —63·20 | —45·50 | —47·47 |
| II எதிர்பாரா நிதி (Contingency Fund (Net) | 5·29 | — | 15·06 | — |
| III பொதுக் கணக்கு (Public Account (Net) | 31·62 | 30·92 | 19·25 | 43·75 |
| மொத்தத்தில் பற்றுக்குறை (I+II+III) | —12·68 | —32·28 | —11·19 | —3·72 |

**1976 - 77ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டம் :** ஓர் ஆண்டின் வரவு - செலவுத் திட்டம் என்பது ஒரு வகையில் முந்திய ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தைச் சார்ந்து உருவாக்கப் பெற்றதாகும். ஆண்டின் வரவு-செலவுத் திட்டங்கள் தொடர்ச்சியாக வருவதால், பழைய திட்டங்களின் பின்புலத்தில் புதிய திட்டத்தைப் புரிந்துகொள்ள வேண்டியது தேவையாகின்றது.

1976 - 77ஆம் ஆண்டின் தமிழகத்தின் வரவு - செலவுத்திட்டத்தை 19-3-76 இல் இந்திய நிதியமைச்சர் மாண்புமிகு. சி. சுப்பிரமணியம் நாடாளுமன்றத்தில் அளித்தார். அந்தத் திட்டத்தின் சாரத்தை முன் பக்கத்தில் காணலாம் :—

1976 - 77ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் முன்னேற்றத்திற்கான வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற மிகுதியாகப் பணத்தை ஒதுக்கியுள்ளனர். குறிப்பாக, வேளாண்மை, மின்சக்தி, நீர்ப்பாசனம், தொழில், போக்குவரத்து ஆகிய துறைகளின் வளர்ச்சிக்காகத் தேவையான அளவில் நிதி வழங்கியுள்ளனர். முதலில் 1976 - 77ஆம் ஆண்டுக்கான தமிழகத்தின் ஆண்டு வளர்ச்சித் திட்டத்திற்கு 177 கோடி ரூபாய் ஒதுக்க நடுவண அரசு ஒப்புதல் அளித்திருந்தது. இப்பொழுது 24கோடி ரூபாய் கூட்டி 201கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளனர்.

தமிழக வரவு - செலவுத் திட்டத்தில் காணப்படுகின்ற குறிப்பிடத்தக்க சிலவற்றைச் சுட்டிக் காட்டலாம். கூடுதலான வரிகளின் மூலம் தமிழக அரசுக்கு ஒன்பது கோடி ரூபாய் மிகுதியாகக் கிடைக்குமென்று எதிர்பார்க்கின்றனர். 1975 -76ஆம் ஆண்டுக்

கான வளர்ச்சித் திட்டத்திற்கு 143 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தனர். 1976 - 77ஆம் ஆண்டிற்கு 201 கோடி ரூபாய் (அஃதாவது 40% மிகுதியாக) ஒதுக்கி யிருப்பது போற்றத்தக்கதாகும். 'மின்சார வளர்ச்சிக்கு முந்திய ஆண்டில் 41 கோடி ரூபாய் அளித்திருந்தனர். இந்த ஆண்டில் மின்சார வளர்ச்சிக்கு 70·18 கோடி ரூபாய் கொடுத்திருக்கின்றனர். சாலைப் போக்குவரத் திற்காக 30·21 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளனர்.

வரவு-செலவுத் திட்டத்தின்மூலமாகச் சில சிறப் பான விளைவுகளை எதிர்பார்க்கின்றனர். 1975-76இல் தமிழகத்தில் உணவு ஆக்கம் 80·6 இலட்சம் டன் னென்று மதிப்பிடுகின்றனர். இதனை 1976-77இல் 83 இலட்சம் டன்னாகக் கூட்டத் திட்டமிட்டுள்ளனர். கிடைக்கின்ற உரத்தின் அளவைக் கூட்டியும், நல்ல பொறுக்கு விதைகளை உருவாக்கும் பண்ணைகளை அமைத்தும், வீணாக இருக்கும் தரிசு நிலங்களில் பயிரிட்டும் உணவு ஆக்கத்தைப் பெருக்கத் திட்ட மிட்டுள்ளனர்.

தமிழகத்தின் கல்வியின் தரத்தையும், கற்றவர் களின் எண்ணிக்கையையும் உயர்த்தவும், மருத்துவ உதவிகளைப் பெருக்கவும், பின்தங்கிய இனத்தவர்களின் முன்னேற்றத்தைக் கவனிக்கவும் தேவையானபணத்தை வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளனர்.

**வரவினங்கள் :** தமிழக அரசின் வரவினங்களை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று: வரி வருவாய்கள். இரண்டு: வரியற்ற பிற வருவாய்கள்.

வரிவருவாய்களையும் இரண்டாகப் பிரித்துக்காண லாம். முதலாவதாக, நடுவண அரசோடு பங்கிட்டுக்

## தமிழக அரசின் வரவினங்கள்

(ரூபாய் இலட்சக் கணக்கில்)

| இனங்கள் | 1971—72 (கணக்குப்படி) | 1972—73 (கணக்குப்படி) | 1973—74 (கணக்குப்படி) | 1974—75 (திட்ட மதிப்பு) |
|---|---|---|---|---|
| I வரி வருவாய் | | | | |
| (அ) மத்திய அரசுடன் பகிர்ந்துகொள்வது | | | | |
| 1. வருமான வரி | 37,80 | 40,12 | 39,52 | 42,23 |
| 2. பண்ணை வரி | 76 | 85 | 1,43 | 71 |
| 3. நடுவண அரசின் ஆயத் தீர்வைகள் | 33,62 | 40,11 | 45,20 | 57,13 |
| மொத்தம் | 72,18 | 81,08 | 86,15 | 1,00,07 |
| (ஆ) மாநில வரிகள் | | | | |
| 1. வேளாண்மை வருமான வரி | 2,01 | 2,18 | 2,17 | 1,50 |
| 2. நிலவரி | 4,49 | 7,36 | 7,85 | 1,84 |
| 3. மாநில ஆயத் தீர்வைகள் | 22,23 | 39,15 | 56,46 | 2,66 |
| 4. விற்பனை வரி | 98,97 | 1,14,02 | 1,32,25 | 2,01,28 |
| 5. முத்திரைகள் (Stamps) | 14,30 | 15,77 | 21,63 | 25,66 |
| 6. பதிவுக் கட்டணம் | 3,37 | 3,46 | 3,99 | 34,77 |
| 7. வண்டிகளின் மீது வரிகள் | 27,99 | 26,15 | 27,63 | 37,82 |
| 8. பிற வரிகள் | 22,06 | 18,07 | 17,88 | 22,08 |
| மொத்தம் | 1,90,42 | 2,26,16 | 2,69,86 | 2,97,61 |
| மொத்த வரி வருவாய் (அ+ஆ) | 2,62,60 | 3,07,24 | 3,56,01 | 3,97,68 |
| II வரிதவிர பிற வருவாய் | 1,37,74 | 1,30,84 | 1,30,29 | 1,03,69 |
| மொத்த வருவாய் | 4,00,34 | 4,38,08 | 4,86,30 | 5,01,37 |

கொள்கின்ற வருமானவரி போன்ற வரிகளின்மூலம் கிடைக்கின்ற வருவாயாகும். இரண்டாவதாக, தமிழக அரசு விதித்துத் தண்டல் செய்து, தானே வைத்துக் கொள்கின்ற விற்பனை வரி போன்ற வரிகளின்மூலம் கிடைக்கின்ற வருவாயாகும்.

வரிதவிரக் கிடைக்கின்ற வருவாய்களில் நடுவண அரசிடமிருந்து கிடைக்கின்ற மானியமும் கடனும் குறிப்பிடத்தக்கவையாகும்.

தமிழக அரசின் வருவாய்களின் அளவையும் வரும் இனங்களையும் முன் பக்கமுள்ள பட்டியலிலிருந்து நன்றாகத் தெரிந்து கொள்ளலாம்.

தமிழக அரசின் மொத்த வருவாய் ஆண்டு தோறும் கூடுகின்றது. மாநில அரசின் வரி வருவாயில் விற்பனை வரிதான் பெரும்பங்கு பெறுகின்றது. மது விலக்கிற்குப் பிறகு மாநில அரசின் ஆயத்தீர்வைகள் மிகவும் குறைந்திருப்பதையும் கவனிக்கலாம்.

**செலவினங்கள் :** தமிழக அரசின் செலவுகளை இரண்டு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம். முதலாவதுவகை வளர்ச்சிப் பணிகளுக்காகும் செலவுகள். இரண்டாவது வகை வளர்ச்சிப் பணிகள் தவிர வேறுவகையான செலவுகள். அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் தமிழக அரசின் இரண்டாண்டு செலவுகளிலிருந்து அரசின் செலவினங்களின் தன்மையை அறியலாம்.

அரசின் செலவுகளைக் கவனித்தால் சமுதாயப் பணிகளில் கல்விக்கும், பொருளாதாரப் பணிகளில் வேளாண்மைத், தொடர்புடைய பிற பணிகளுக்கும் மிகுதியாகச் செலவிடுவதைக் காணலாம்.

(ரூபாய் இலட்சக் கணக்கில்)

| இனங்கள் | 1974—75 | 1975—76 |
| --- | --- | --- |
| I. வளர்ச்சிச் செலவுகள் (Developmental) | | |
| 1. சமுதாயப் பணிகள் | | |
| (i) கல்வி | 11,473 | 11,827 |
| (ii) மருத்துவம், குடும்ப நலம், பொதுத் துப்புரவு, குடிதண்ணீர் பிற | 5,633 | 5,839 |
| (iii) குடியிருப்பு, நகர வளர்ச்சி | 1,097 | 824 |
| (iv) சமுதாயப் பாதுகாப்பு, நலம் | 2,957 | 2,617 |
| (v) பிற | 2,097 | 2,852 |
| மொத்தச் செலவு | 23,257 | 23,959 |
| 2. பொருளாதாரப் பணிகள் | | |
| (i) வேளாண்மை, தொடர்புடைய துறைகள் | 7,670 | 6.816 |
| (ii) தொழில்கள், கனிப்பொருள்கள் | 1,402 | 1,154 |
| (iii) தண்ணீர், மின்சக்தி வளர்ச்சி | 1,151 | 1,400 |
| (iv) போக்கு வரத்து, செய்தித் தொடர்புகள் | 3,493 | 2,706 |
| (v) பிற பொருளாதாரப் பணிகள் | 1,214 | 1,008 |
| மொத்தச் செலவு | 14,930 | 13,084 |
| மொத்த வளர்ச்சிச் செலவுகள் (1+2) | 38,187 | 37,043 |
| II வளர்ச்சிப் பணிதவிர பிறவற்றிற்கு (Non—Developmental) | 18,807 | 22,148 |
| மொத்தச் செலவு | 56,994 | 59,191 |

1975 - 76ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தின் செலவில் 69·1% நடைமுறைச் செலவாகவும் 30·9% முதலினச் செலவாகவும் இருந்தன. மேலும் ஆராய்ந்து பார்த்தால் தமிழக அரசின் செலவினங்கள் கீழ்க்காணும் வகையில் அமைவதாகச் சுட்டிக் காட்டலாம்.

சமுதாயப் பணிகள் 40·5%
பொருளாதாரப் பணிகள் 22·1%
பொதுப் பணிகள் 35·5%
பிற பணிகள் 1·9%

**தமிழக அரசின் பங்கு:** இந்தியாவிலேயே மிகவும் பின்தங்கிய மாநிலங்களுள் ஒன்ருகத் தமிழகத்தைக் கருதுகின்றனர். இங்குப் பாதிக்குமேல் (59%) மக்கள் வறுமையில் வாடுவதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

மின்சார வளர்ச்சி போன்று சில துறைகளில் தமிழகம் முன்னணியில் நிற்கின்றது. ஆனால், பொதுவான வளர்ச்சியில் தமிழகம் மேலும் தீவிரமாக முயலவேண்டியதிருக்கின்றது. அரசின் வரவு-செலவுத் திட்டம் மக்களைப் பரந்த அளவில் ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்தவேண்டும். அதற்கான வகையில் எதிர்காலத்தின் வரவு-செலவுத் திட்டங்கள் அமையுமென்று எதிர்பார்க்கலாம்.

## 6. அரசின் வரவுகளும் செலவுகளும் அவற்றின் விளைவுகளும்

ஒரு நாட்டின் வரவு - செலவுத் திட்டம் வெறும் உயிரற்ற புள்ளி விவரங்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கவில்லை. திட்டத்தில் காணப்படுகின்ற ஒவ்வொரு வரவுக்கும் செலவுக்கும் நாட்டு மக்களின் வாழ்வுக்கும் வளத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. இந்தத் தொடர்பும், இதனை ஒட்டிய விளைவுகளும் வெளிப்படையாகத் தெரிவதில்லை. ஆனால், இதனை நாம் ஆராய்ந்து பார்த்தால் விளைவுகளின் ஆற்றலை அறிந்துகொள்ளலாம்.

**வரவுகளும் செலவுகளும் ;** ஒரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை அரசின் வரவு-செலவுத் திட்டம் மாற்றவோ, கட்டுப்படுத்தவோ, விரிவுபடுத்தவோ இயலும். இதனைப் பொருளாதாரத்தை மொத்தமாகப் பார்ப்பதன்மூலம் புரிந்து கொள்ளலாம்.

நாட்டின் மொத்தப் பொருளாதார நடவடிக்கைகள் மக்களிடமுள்ள மொத்தப் பொருள் வளத்தைச் சார்ந்து அமைகின்றன. அரசுக்கு வரவுகளாகப் பணம் வருகின்ற வகைகளைக் கண்டோம். அவற்றில் ஒரு பகுதி மக்கள் செலுத்தும் வரிகளாகும். மக்கள் வரிகளாக நிறையப் பணத்தைச் செலுத்தினால் அவர்களிடமிருக்கின்ற பணத்தின் அளவு குறையும். அந்த அளவிற்கு நாட்டு மக்களின் வாங்கும் ஆற்றல் குறைவதால் பொருள்களுக்குரிய தேவையும் குறையும். இதனால் பொருளாதார வளர்ச்சி பாதிக்கும் நிலை ஏற்படலாம். அரசு வரிவிதிக்கின்றபொழுது இத்தகைய

பாதக விளைவுகள் ஏற்படாமல் இருக்கும் வரிகளைத் தேர்ந்து விதிக்க வேண்டும்.

அரசின் சில செலவுகள் நேரடியாக மக்களின் வருவாயைக் கூட்டுகின்றன. மக்களின் கையிருப்புப் பணம் கூடுகின்றபொழுது பொருள்களுக்குத் தேவை கூடலாம். இதன் விளைவாகப் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைய வாய்ப்புகள் தோன்றும். அரசின் செலவுகள் முதலீடாக மாறிப் புதிய தொழில்களை வளர்க்கலாம். நாட்டில் வேலை வாய்ப்புகளும் வருவாயும் கூடுவதால் பொருளாதார வளர்ச்சி ஏற்படும். பொருளாதார முன்னேற்றத்திற்குத் துணைசெய்கின்ற வகையில் அரசின் பொதுச் செலவுகள் கூடுவதை வரவேற்கலாம். ஆனல், மக்களுக்கு நேரடியாக நலன் பயக்காத வகையில் படைக்கலங்களுக்காகவும், ஆட்சியாளர்களின் ஆடம்பரச் செலவுகளுக்காகவும், உலகச் சுற்றுப் பயணங்களுக்காகவும் அரசின் வருவாயில் பெரும் பகுதியைச் செலவிட்டால் வேண்டாத விளைவுகளே ஏற்படும். நாட்டுப் பொருளாதாரத்தில் தேக்க நிலை தலைதூக்கும்.

**வரி அமைப்பு முறை:** அரசின் வரவு - செலவுத் திட்டத்திலுள்ள வரி அமைப்பு முறையிலிருந்து திட்டத்தின் விளைவுகளைக் கணிக்கலாம். திட்டத்திலிருக்கின்ற நேர்முக வரிகள் மக்களை உடனடியாகப் பாதிக்கின்றன. மறைமுக வரிகள் பொருளாதார நடவடிக்கைகளைக் காலப் போக்கில் மாற்றுகின்றன.

வரிகள் எப்படிப் பொருளாதார நடவடிக்கைகளை ஊடுருவிச் சில விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதைப் பின்வரும் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம்.

நமது நாட்டிலிருக்கும் வருமான வரியைக் கவனிப்போம். 1973-74ஆம் ஆண்டின் வரிவிதிப்பின் படி 5,000 ரூபாய்க்குமேல் வருவாய் உள்ளவர்கள் எல்லாம் வரி கட்டவேண்டும். அப்பொழுதிருந்த வருவாய் வளர்வரி விழுக்காடு மிகுதியாக இருந்ததாகக் கருதப்பட்டது. ஒருவருக்கு ரூ. 10 000 வருவாயிருந்தால் ரூ. 550 வரிகட்ட வேண்டும். ரூ. 20,000 வருவாயாக உயர்ந்தால் ரூ. 2,875 வரிக்கட்ட வேண்டும். வருவாய் ரூ. 50,000 ஆகக் கூடினால் ரூ. 19,550 (39 10%) வரி செலுத்த வேண்டும். ஓர் இலட்சமாக வருவாய் உயர்கின்றபொழுது வரி ரூ. 59 800 ஆகக் கூடும். அஃதாவது வரி செலுத்தியதுபோக அவரிடம் ரூ. 41,200 தான் எஞ்சி நிற்கும். மூன்று இலட்சம் ரூபாய் வருவாய் கிடைத்தால் ரூ. 2,49,550 வரி கட்டியதுபோகக் கையில் ரூ. 50,450 இருக்கும். ஒருவர் பத்து இலட்சம் ரூபாய் தேடினால் ரூ. 9,33,800 வரி கட்ட வேண்டும். அவர் கைக்கு ரூ. 66,200 மட்டும் கிடைக்கும்.

இந்த உயர்ந்த வரிவிழுக்காட்டைக் கண்டு மிகுதியாக வருவாய் பெற்றவர்கள் அஞ்சினார்கள். குறிப்பிட்ட அளவிற்கு மேல் கிடைக்கின்ற பணத்தைக் கணக்கில் காட்டாமல் மறைத்து வைத்தார்கள். இப்படிக் கணக்கில் காட்டாமல் ஒதுக்கிய பணத்தைத்தான் "கறுப்புப் பணம்" (Black Money) என்று கூறுகின்றோம். தனியார் கையில் பல கோடிக் கணக்கில் கறுப்புப்பணம் சேர்ந்தது. இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு சட்டத்திற்குப் புறம்பான எண்ணற்ற செயல்களைச் செய்தனர். விலை ஏற்றத்திற்குக் கறுப்புப் பணம் தலையாய ஏதுவாக இருந்தது.

வரிக்கு அஞ்சிய செல்வர்கள் தொழில்களைப் பெருக்கி வருவாயைக் கூட்டுவதில் ஆர்வம் காட்ட வில்லை. வருவாயில் சேமிப்பின் பங்கு குறையத் தொடங்கியது. மொத்தத்தில், மிகுதியான வருமான வரியால் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

1975ஆம் ஆண்டில் பல இடங்களில் இருட்டில் முடங்கிக் கிடந்த கறுப்புப் பணத்தை வெளிக் கொண்டு வரத் தீவிர நடவடிக்கைகள் எடுத்தனர். கடுமை யாக எச்சரித்தனர். பின்னல் ஒருநாள் குறிப்பிட்டு, அந்த நாளுக்குள் தங்களிடம் குவிந்திருக்கும் கறுப்புப் பணத்தை அறிவித்தால் தண்டனையிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வாய்ப்பளித்தனர். இதனுல் அரசுக்குக் கோடிக்கணக்கில் வருவாய் கிடைத்தது

1976 - 77ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் கடந்த காலத்தை மனத்தில் கொண்டு வருமான வரியின் பளுவைக் குறைத்திருக்கின்றனர். இப்பொழுது ரூ. 8,000க்குமேல் வருவாயுள்ளவர்கள் தான் வரி கட்டவேண்டும்.

வரிப்பளு குறைந்திருப்பதை ஒப்பிட்டுப் பார்த்து அறியலாம். 1973 - 74இல் மூன்று இலட்சம் வருவாய் உள்ளவர் ரூ 2,49,550 வரி கட்டவேண்டும். ஆனுல், இப்பொழுது ரூ 1,75,120 வரி கட்டினுல் போதும். கட்ட வேண்டிய வரியில் ரூ 74,430 குறைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதனுல் வரி ஏய்ப்பின் அளவு குறையுமென்று அரசு எதிர்பார்க்கின்றது.

இப்பொழுது நமது நாட்டில் ஏறத்தாழ முப்பது இலட்சம் பேர் வருமான வரி செலுத்துகின்றனர்.

இவர்கள் கட்ட வேண்டிய வரி குறைவதால், இவர்கள் மேலும் சேமிக்கவும் முதலீடு செய்யவும் தூண்டுதல் கிடைக்கின்றது.

வருமான வரியைப்பற்றி ஆராய்ந்ததுபோல அரசு விதிக்கின்ற ஒவ்வொரு வரியின் விளைவுகளையும் ஆராயலாம்.

**சமுதாய நீதி:** அரசு தன்னுடைய வரவு - செலவுத் திட்டத்தின்மூலம் சமுதாயத்தில் நீதியை நிலைநாட்ட முயல்கின்றது. நாட்டில் ஏழைகளும் செல்வர்களும் இருக்கின்றனர். இவர்களுக்கிடையில் மிகுந்த இடைவெளி இருக்கின்றது.

ஏழை எளியவர்களுக்கு வாழ்க்கையே போராட்டமாக இருக்கின்றது. நமது நாட்டில் 40% மக்கள் வறுமை வட்டததிற்குள் வாடுகின்றனர். நமது அரசியல் அமைப்புச் சட்டப்படி எல்லா மக்களுக்கும் வாழ்வளிப்பது அரசின் கடமையாகும். இந்தக் கடமையைச் செய்யும் கருவியாக வரவு - செலவுத் திட்டம் இருக்கின்றது.

அரசு, வரி செலுத்தும் ஆற்றலுள்ள செல்வர்களிடம் நிறைய வரி வாங்குகின்றது. அந்த வருவாயை ஏழை எளியவர்களுக்கு நன்மை செய்யும் முறையில் செலவிடுகின்றது. சான்றாக, அரசு நடத்துகின்ற கல்வி நிலையங்களையும், மருத்துவ நிலையங்களையும் நாடெங்கும் காணலாம். அவற்றில் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும், பின் தங்கிய இனத்தவர்களுக்கும் கட்டணம் வாங்காமலும், குறைந்த கட்டணத்திலும் கல்வி, மருத்துவ வசதிகள் கிடைக்கின்றன.

பல வரிகளை விதிக்கின்றபொழுதும் சமுதாய அறத்தின் அடிப்படையில் வரிகளின் விளைவுகளைக் கவனிக்கின்றனர். குறைந்த வருவாயுள்ளவர்களைப் பாதிக்கின்ற வரிகளை விதிப்பது வரவேற்கத்தக்கதல்ல. இதனால்தான் இன்றியமையாத பொருள்களின்மீது வரிகள் விதிப்பதைத் தவிர்க்கின்றனர்.

செல்வர்கள் நுகரும் ஆடம்பரப் பொருள்களின் மீது மிகுதியாக வரிகள் விதிப்பதைப் பொதுவாக வரவேற்கின்றனர். வருமான வரி, செல்வ வரி போன்றவற்றை வளர் விழுக்காட்டில் விதிப்பதற்கும் சமுதாய நீதிதான் அடிப்படைக் காரணமாகும்.

**பொருளாதார வளர்ச்சி:** அரசின் வரவு - செலவுத் திட்டம் ஓராண்டிற்குத் திட்டப்பட்டாலும் திட்டத்தில் நீண்டகாலக் கண்ணோட்டம் தேவையாகும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படையை உறுதியாக அமைக்க வேண்டும். முன்னேற்றத்தில் குறுக்கிடுகின்ற தடைக்கற்களைப் படிப்படியாக அகற்ற வேண்டும்.

நமது நாட்டின் வரவு - செலவுத் திட்டத்தில் பொருளாதார வளர்ச்சிக் கண்ணோட்டம் இருப்பதனைச் சுட்டிக் காட்டலாம். 1976 - 77 ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் வளர்ச்சிப் பணிகளின் திட்டத்திற்காக 7,852 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளனர். இது முந்திய ஆண்டு ஒதுக்கியதைவிட 31·6% மிகுதியாகும்.

இந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படைத் துறைகளான வேளாண்மை, தொழில், சுரங்கம், மின்சக்தி, போக்குவரத்து போன்றவற்றில் ஏற்பட்டிருக்கும் மறுமலர்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ளத்

திட்டம் வழி வகுக்கின்றது. நாட்டிலேற்பட்டிருக்கும் விலைகள் குறைகின்ற போக்கைப் பயன்படுத்திக்கொள்ள முயல்கின்றனர்.

ஒவ்வொரு துறையின் வளர்ச்சிக்கும் வரவு - செலவுத் திட்டம் என்னசெய்வ தென்பதைக் குறிப்பிடுகின்றது. எடுத்துக்காட்டாக வேளாண்மைத் துறையைக் குறிப்பிடலாம். தரமான விதை கிடைக்கவும், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கவும், தேவையான அளவில் உரம் கிடைக்கவும் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டம் வாய்ப்பளிக்கின்றது. இந்த ஆண்டின் இறுதியில் உணவு உற்பத்தி 11 மில்லியன் டன்னை எட்டிப் பிடித்துவிடுமென்று எதிர்நோக்குகின்றனர்.

இந்தியாவின் வரவு-செலவுத் திட்டத்தில் இரண்டு நோக்கங்கள் இருப்பதனை நிதியமைச்சர் குறிப்பிட்டுக் கூறியுள்ளார். முதலாவதாக, நாட்டில் வேலை வாய்ப்பையும், உற்பத்தியையும் கூட்ட எண்ணுகின்றனர். இதற்காகத் தொழில் வளர்ச்சியிலும், ஆக்கப் பணிகளிலும் கவனம் செலுத்துகின்றனர். இரண்டாவதாக, நமது நாட்டிலிருக்கும் இயற்கை வளங்களை அறிவியல் முறையில் பயன்படுத்தி, நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் உயிரோட்டத்தை ஏற்படுத்த விரும்புகின்றனர்.

**அரசின் நேரடிப் பங்கு:** தற்காலத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அரசு நேரடியாகப் பங்கு பெறுகின்றது. தனியார் நடத்திய பல தொழில்கள் அரசின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளன. புதுப் புதுத் தொழில்களைத் தொடங்கி நடத்துவதில் அரசுக்கு

ஆர்வம் இருக்கின்றது. நமது நாட்டில் பெரிய வங்கிகளை (Banks) அரசு நாட்டுடைமையாக்கியிருக்கின்றது. இதனால் அரசின் பணநிதிக் கொள்கையைச் சிறப்பாகச் செயல்படுத்த முடிகின்றது. தேவையை ஒட்டிப் பற்றுக்குறை நிதியாக்கத்தின் மூலமும், உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன் பெற்றும் வளர்ச்சித் திட்டங்களை விரிந்த அளவில் அரசால் செயல்படுத்த முடிகின்றது.

ஆண்டுக்கொருமுறை வரவு - செலவுத் திட்டம் தீட்டுவதாலும், தேவையானால் இடைக்கால வரவு - செலவுத் திட்டம் போட வாய்ப்பு இருப்பதாலும், முந்திய திட்டத்தின் விளைவுகளை அறிந்து, மதிப்பிட்டு, கொள்கைகளிலும் நடைமுறையிலும் தேவையான மாறுதல்களைச் செய்ய முடிகின்றது.

இன்றைய பொருளாதார வாழ்க்கை மிகவும் சிக்கல் நிறைந்ததாக உள்ளது. பொருளாதாரப் பணிகள் வளர்ந்துள்ளன. எந்த நடவடிக்கையினால் என்ன விளைவுகள் இருக்குமென்பதைத் திட்ட வட்டமாக மதிப்பிடுவதில் தொல்லைகள் இருக்கின்றன. இருந்தாலும் அரசின் வரவு - செலவுத் திட்டத்தை நுட்பமாக உருவாக்கினால் இன்றும் எதிர்நோக்கும் விளைவுகளை ஏற்படுத்த முடியும்.

## 7. பற்றுக்குறை நிதியாக்கம்

(Deficit Financing)

அரசு, கிடைக்கின்ற வருவாய்க்குள் பொதுச் செலவுகளை மேற்கொள்கின்றபொழுது சிக்கல்கள் எழுவதில்லை. ஆனால், நடைமுறையில், குறிப்பாகத் தற்காலத்தில், அரசு வருவாய்க்குமேல் செலவிடுவது தேவையாகின்றது. வரவுக்குமேல் செலவு இருப்பதனைப் பற்றுக்குறை என்கின்றோம்.

அரசு, வரவுக்கு மேலாகும் செலவை எப்படிப் பெறுகின்றதென்பதைக் கவனிக்க வேண்டும். பொதுவாக இரு முறைகளில் அரசு பற்றுக்குறை நிதியைப் பெறுகின்றது. முதலாவதாக, கையிருப்பில் ரொக்கம் இருந்தால் அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இரண்டாவதாக, மைய வங்கியிடமிருந்து கடன் பெற்று நிதித் தேவையை நிறைவு செய்யலாம்.

அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் பற்றுக்குறை இருந்து, அரசு பற்றுக்குறை நிதியாக்க முறையைப் பின்பற்றுகின்றபொழுது நாட்டுப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க விளைவுகள் ஏற்படுகின்றன. ஆதலால் பற்றுக்குறை நிதியாக்கம் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்வது தேவையாகின்றது.

**தேவைகள் :** தனி மனிதர்கள் இயல்பான செலவுகளைச் சரிக்கட்ட தங்களது வருவாயால் இயலாமல் போகின்றபொழுதோ, எதிர்பாராத செலவுகள்

வருகின்றபொழுதோ பற்ருக்குறை நிலையில் இருக்கின்றனர். ஆனல், அரசு விரும்பியே, நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலையை ஒட்டி, சில எதிர்நோக்கும் விளைவுகளை ஏற்படுத்துவதற்காகப் பற்ருக்குறை நிதியாக்க முறையைப் பின்பற்றுகின்றது.

நாட்டுப் பொருளாதாரத்தில் தேக்கநிலை உருவானல், பொருளாதார நடவடிக்கைகள் குறையும். மககளின் வருவாய் குறைந்த நிலையில் பொருள்களுக்குரிய தேவை சுருங்கும். தேவை குறைந்துவரும் பொழுது விலையில் வீழ்ச்சி ஏற்படும். சரிகின்ற நிலையினல் தொழில், வாணிப நிறுவனங்களின் ஆதாயம் பாதிக்கப்படும். அவை தங்களுடைய நடவடிக்கைகளை மேலும் கட்டுப்படுத்தும் போக்குத் தோன்றும். இவற்ருல் எல்லாம் நாட்டுப் பொருளாதாரம் மந்த நிலையில் சிக்கி, சேற்றில் பதிந்து நிற்கும் வண்டிபோல, முன்னேறிச் செல்ல முடியாமல் தவிக்கின்றது.

முடங்கி நிற்கும் பொருளாதாரத்தை இயங்கச் செய்து முன்னேற்றம் காண அரசு தனது வரவு - செலவுத் திட்டத்தின்மூலம் தக்க நடவடிக்கை எடுப்பது தேவையாகின்றது. அரசு மக்கள்மீது விதிக்கின்ற வரிகளைக் குறைக்கலாம். வரிகளைக் குறைக்கின்ற பொழுது மக்களின் நுகர்வு கூடும். தொழில் உற்பத்தி கூடவும், வாணிபம் பெருகவும் ஓரளவு வழி ஏற்படும். அரசு வரிகளைக் குறைப்பதனல் அதனுடைய மொத்த வருவாய் குறையும். தன் செலவுகளைச் சரிக்கட்ட அரசு பற்ருக்குறை நிதியாக்க முறையைப் பின்பற்றுகின்றது.

வரிகளைக் குறைப்பதன்மூலம் பொருளாதார நடவடிக்கைகளில் எல்லா நேரங்களிலும் பெரும் எழுச்சியைக் காண முடியாது. அத்தகைய பெரும் மாற்றமும் வளர்ச்சியும் ஏற்படாத சூழ்நிலையில் அரசு தன் பொதுப் பணிகளை விரிவு படுத்தி, குறிப்பிடத் தக்க வகையில் பொதுச் செலவினுல் பொருளாதாரப் பணிகளில் உயிரோட்டத்தை ஊட்ட வேண்டிய திருக்கின்றது வரி வருவாயைக் கூட்டாமல் செலவுகளை மிகுதிப் படுத்துகின்றபொழுது பற்ருக்குறை நிதி யாக்கம் தவிர்க்க முடியாத ஒன்ருகின்றது.

போர்க்காலத்தில் எதிர்பாராத பாதுகாப்புச் செலவுகள் கூடுவதால் பற்ருக்குறை நிதியின்மூலம் அரசு, செலவைச் சரிக்கட்ட முயல்கின்றது.

பின்தங்கிய நாடுகளில் விரைந்து பொருளாதார முன்னேற்றம் காணப் பற்ருக்குறை நிதியாக்கம் இன்றி யமையாத தேவையாகின்றது. பொருளாதார வளர்ச்சி பெருத நாடுகளில் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முதலீட்டை எல்லாம் தனியாரால் வழங்க முடிவ தில்லை. தொழில்களைத் தோற்றுவிக்காமலும், பொரு ளாதாரத்திற்கு அடிப்படையான வேளாண்மை, போக்குவரத்து, மின்சாரம் ஆகியவற்றை வளர்க்கா மலும், நாட்டுப் பொருளாதாரம் விரைந்து முன்னேருது. இத்தகைய சூழ்நிலையில் அரசு மிகப் பெரிய அளவில் நேரடியாகப் பொருளாதாரப் பணிகளை மேற்கொள்வது தேவையாகும். எடுத்துக்காட்டாக, நமது நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்களின்மூலம் அரசு பொருளாதார வளர்ச்சியில் பங்கு பெறுவதைக் கூறலாம். இப்படிப் பட்ட சூழ்நிலையில் வரி வருவாயின் வழியாகவும்,

கடன்களின் மூலமாகவும் மட்டும் அரசு ஆக்கப் பணி களுக்கு வேண்டிய நிதியை எல்லாம் பெறமுடியாது. பற்றுக்குறை நிதியாக்கத்தின்மூலம் பொருளாதார அரசு பொருளாதார முன்னேற்றத்தில் ஈடுபடுவதைப் பொருளியலறிஞர்கள் வரவேற்கின்றனர்.

**விளைவுகள்:** தேங்கி நிற்கும் மந்த நிலையிலுள்ள பொருளாதாரத்தை இயக்க நிலைக்குக் கொண்டு வரு கின்ற பற்றுக்குறை நிதியாக்கத்தின் விளைவுகள் வர வேற்கக் கூடியனவாக இருக்கும். பற்றுக்குறை நிதியாக் கத்தால் உருவாகும் விலையேற்றம் அதுவரை முடங்கிக் கிடந்த தொழில், வாணிப நிறுவனங்களைத் தூண்டி விடும். சேற்றில் அகப்பட்ட வண்டி நல்ல பாதையில் வந்துசேரும் வரை துணை வேண்டும். அதற்குப் பிறகு வெளி உதவியின்றி ஓடும். அதேபோல மந்த நிலை மாறி வளர்ச்சி நிலை தோன்றிய பிறகு அரசு தொடர்ந்து பற்றுக்குறை நிதியாக்கத்தைப் பின்பற்று கின்ற நிலை ஏற்படாது.

பின்தங்கிய நாடுகளில் பொருளாதார வளர்ச்சி நோக்கில் பற்றுக்குறை நிதியாக்க முறையைப் பின்பற்று கின்றபொழுது பண வீக்கம் (Inflation) என்னும் புதிய சிக்கல் தோன்றுகின்றது. இந்தச் சிக்கல் வேறு பல சிக்கல்களை உருவாக்கும் ஆற்றல் பெற்றிருப்பதால் இதனைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும்.

அரசு பொருளாதார வளர்ச்சி நோக்கில், பற்றுக் குறை நிதியாக்கத்தின்மூலம் நிறைய முதலீடு செய் கின்றது. அரசின் செலவு மக்களுக்கு வருவாயாக இருக்கும். குறைந்த வருவாயில் தாழ்ந்த வாழ்க்கைத் தரத்தில் அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவு

செய்ய முடியாமல் அல்லற்படுகின்ற மக்கள் கூடுதலாகக் கிடைக்கின்ற வருவாயை எல்லாம் செலவிடுவார்கள். நாட்டில் மொத்தச் சேமிப்புக் குறைவாக இருக்கும்.

மக்களின் தேவைகள் கூடுகின்றபொழுது, குறுகிய காலத்தில் பொருள்களின் அளிப்பு மிகுதிப்படாத நிலையில் விலைகள் ஏறும். விலை ஏற்றப் போக்கு மேலும் மேலும் விலைகளைக் கூடச் செய்வதைப் "பணவீக்கம்" என்கின்றோம். பணவீக்கம் ஏற்பட்டால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியினால் கிடைக்கக் கூடிய நன்மைகள் உண்மையில் இல்லாமல் போய் விடும்.

பணவீக்கம் பற்றுக்குறை நிதியாக்கத்தின் நோக்கங்களை முறியடிப்பதாக இருக்கின்றது. அரசினால் திட்டமிட்டபடி பல ஆக்கப்பணிகளை நிறைவேற்ற இயலாது. அரசின் செலவுகளை மேலும் மேலும் கூட்டவேண்டிய தேவை ஏற்படும். பொருள்களின் விலைகள் கட்டுக்கடங்காமல் மேலேறிச் செல்கின்றபொழுது மக்களுக்குப் பொருளாதார வளர்ச்சியின்மீதுள்ள நம்பிக்கை குறையும்.

பற்றுக்குறை நிதியாக்கத்தைப் பின்பற்றுகின்றபொழுது அரசு மிகவும் கவனமாக இருக்கவேண்டும். முழுவதுமாக விலை ஏற்றத்தைத் தவிர்க்க இயலாது. ஆனால், தக்க மாற்று நடவடிக்கைகளின்மூலம் விலை ஏற்றம் கட்டுப்படுத்த முடியாத பணவீக்கமாக மாறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அரசு சரியான பணக் கொள்கையை (Monetary Policy)ப் பின்பற்றி, வங்கிகளின் கடன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி, நாட்டில்

முதன்மைத் தேவைகளை நிறைவு செய்யத் தக்க உற்பத்தியைப் பெருக்கினால் பணவீக்கத்தைக் கட்டுப் படுத்த முடியும். பற்றாக்குறை நிதியாக்கத்தின் மூலமாக எதிர்பார்க்கும் வளர்ச்சி ஏற்படும்.

**நமது நாட்டில் பற்றாக்குறை நிதியாக்கம்:** நமது நாட்டில் விடுதலைக்குப் பிறகு அரசின் பொதுச் செலவுகள் பெருகியுள்ளன. நாட்டுப் பிரிவினையினால் ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்க்கவும், சீனாவோடும், பாகிஸ்தானோடும் மூண்ட போரினாலும், ஐந்தாண்டுத் திட்டங்களைப் பெருமளவில் மேற்கொண்டதாலும் அரசின் செலவுகளைத் தொடர்ந்து கூட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது. வரி வருவாயை உயர்த்தியும், உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றும் தேவையான அளவிற்குப் பொதுவருவாய் கிடைக்காத நிலையில் அரசு பற்றாக்குறை நிதியாக்க முறையைக் கைக்கொண்டது. நமது நாட்டின் பற்றாக்குறை நிதி யாக்கத்தின் தலையாய நோக்கம் பொருளாதார வளர்ச்சி யாகும்.

இந்திய அரசின் வரவு - செலவுத் திட்டத்தின் பற்றாக்குறை நிதியாக்கத்தைச் சில குறிப்பிட்ட ஆண்டு களிலிருந்த நிலையிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

நமது நாட்டில் பற்றாக்குறை நிதியாக்கத்தை மேற் கொண்டதால் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக் கின்றது. நாடு விடுதலை பெறுவதற்கு முன்னால் பின் தங்கிய பொருளாதாரமாக (Under-developed Econamy) இருந்த இந்தியா இப்பொழுது வளர்கின்ற பொருளா தாரமாக (Developing Econamy) மாறியிருக்கின்றது.

பல புதிய தொழில்கள் வளர்ந்திருக்கின்றன. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கின்றது.

வரவு - செலவுத் திட்டத்தின் மொத்தப் பற்றுக்குறை நிதி நிலை

| ஆண்டு | பற்றுக்குறை (ரூபாய் கோடிக்கணக்கில்) |
|---|---|
| 1950–51 | 3 66 |
| 1955—56 | 159·87 |
| 1965—66 | 172 78 |
| 1969—70 | 290·11 |
| 1971—72 | 519·30 |
| 1972—73 | 718·50 |
| 1975–76 | 490·00 |
| 1976—77 | 368·00 |

பற்றுக்குறை நிதியாக்கத்தினால் ஏற்பட்ட மிகப் பெரிய சிக்கல் பொருள்களின் விலைகள் அளவு கடந்து கூடியதாகும். எடுத்துக்காட்டாக உணவுப் பொருள்களின் விலை 1961-62ஆம் ஆண்டின் அடிப்படையாகக் கொண்டு (100) கணக்கிட்டதில் 1974 மார்ச்சில் 331 ஆகக் கூடியிருந்தது. எல்லாப் பொருள்களின் விலைகளும் கூடியதால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. நடுத்தர நிலையிலும் கீழ்நிலையிலும் உள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

1975ஆம் ஆண்டில் அரசு நெருக்கடி நிலையை அறிவித்து, நாட்டின் பொருளாதார செயல்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் நடவடிக்கைகளை எடுத்தது. தலைமையமைச்சரின் 20 இயல்புகளைக் கொண்ட திட்டம் நுகர்வோருக்குக் குறிப்பிட்ட விலைக்குள் பொருள்கள் கிடைக்க வழி வகுத்திருக்கின்றது.

1976-77ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்திலுள்ள பற்றுக்குறை நிதியாக்கம் விலைகளை ஏற்றுமலிருக்க, தக்க தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதாக நிதியமைச்சர் அறிவித்துள்ளார். அரசின் நடவடிக்கைகள் சரியான முறையில் அமைந்தால் பற்றுக்குறை நிதியாக்கத்தினுல் நல்ல பொருளாதார வளர்ச்சி ஏற்படுமென்று நம்பலாம்.

———

## 8. பிற நாடுகளின் வரவு - செலவுத் திட்டம்

அரசு திறமையாகச் செயல்படவும், நிதி நிர்வாகம் செம்மையாக நடைபெறவும் வரவு - செலவுத் திட்டம் இன்று உலகில் பெரும்பாலான நாடுகளில் உருவாக்கப் படுகின்றது. வரவு - செலவுத் திட்டத்தின் தன்மையும், அதனைச் செயல்படுத்தும் முறையும் அந்தந்த நாட்டின் அரசியல் அமைப்பையும், ஆட்சி முறையையும் ஒட்டி வேறுபடுகின்றன. ஆதலால் உலக நாடுகளின் வரவு - செலவுத் திட்டத்தைச் சில பொதுவான இயல்புகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் விளக்கலாம்.

**வரவு - செலவுத் திட்டக்காலம் :** பொதுவாக வரவு - செலவுத் திட்டம் ஓராண்டு காலத்திற்குத் தீட்டப் பெறுகின்றது. இந்த ஆண்டின் தொடக்கத்தையும் முடிவையும் அந்தந்த நாட்டின் சூழ்நிலைக்கேற்ப அமைத்துக் கொள்கின்றனர்.

பொதுவாக நிதியாண்டு மூன்று வகையாக அமைகின்றது. முதலாவதாக, பிரான்சு, ஜெர்மனி, சுவிட்ஜர்லாந்து ஆகிய நாடுகள் சனவரி முதல் டிசம்பர் 31 வரை ஒரு நிதியாண்டாகக் கருதுகின்றன. இரண்டாவதாக, நமது நாட்டைப் போன்று இங்கிலாந்தும் இன்னும் சில நாடுகளும் ஏப்ரல் 1 முதல் மார்ச்சு 31 வரை உள்ள காலத்தை ஒரு நிதியாண்டாகக் கொள்கின்றனர். மூன்றாவதாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவீடன் ஆகிய நாடுகளில் நிதியாண்டு ஜூலை ஒன்றில் தொடங்கி ஜூன் 30 இல் முடிகின்றது.

பெரும்பாலான நாடுகளில் நிதியாண்டு தொடங்குவதற்கு ஓரிரு திங்களுக்கு முன்னால் வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் வெளியிடுகின்றனர். இதற்கு விதிவிலக்காக இருக்கும் நாடுகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக சுவீடனில் நிதியாண்டு ஜூலை ஒன்றில் தொடங்குகின்றது. ஆனால், அங்கு வரவு - செலவுத் திட்டத்தை சனவரி இரண்டாம் வாரத்தில் வெளியிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றனர்.

**அமெரிக்கா:** அமெரிக்காவில் நிர்வாகத் துறையின் தலைவர் ஒரு நிர்வாக வரவு - செலவுத் திட்டத்தை உருவாக்குகின்றார். இதில் அரசு மேற்கொள்ளப் போகின்ற செயல்முறைத் திட்டங்கள் இருக்கின்றன. சட்டமன்றத்துறை நிர்வாகத் துறையினர் அளித்த திட்டத்தில் தேவையான மாறுதல்களைச் செய்து, வரவுகளையும் செலவுகளையும் வரையறுத்துச் சட்டமாக இயற்ற ஆவன செய்கின்றது.

அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்திற்கு வருகின்றபொழுது ஆளுங் கட்சியினர் அதனை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற மரபு அங்கு இல்லை. ஆளுங் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் வரவு - செலவுத் திட்டத்தில் விரும்புகின்ற மாற்றங்களைச் செய்து நிறைவேற்றுகின்றனர்.

அமெரிக்க அரசின் வரவு - செலவுத் திட்டமுறை 1921ஆம் ஆண்டின் சட்டப்படி செயல்படுத்தப்படுகின்றது. வரவு - செலவுத் திட்டத்தை உருவாக்கும் நடைமுறையில் காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இப்பொழுது வரவு - செலவுத் திட்ட நிர்வாக அலுவலகம் (The office of Management and Budget) வரவு - செலவுத் திட்டத்தை உருவாக்குவதில் ஈடுபட்டிருக்கின்றது. அதில் நாட்டுப் பாதுகாப்பு, பன்னாட்டுப் பணிகள், இயற்கை வளங்கள், மனித வளங்கள், பொருளாதாரம், அறிவியல், தொழில் நுணுக்கம், அரசின் பொதுப்பணிகள் ஆகிய பிரிவுகள் செயல்படுகின்றன.

அமெரிக்க நாட்டின் வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் அளிக்கின்றபொழுது அமெரிக்கத் தலைவர் (President) இரண்டு சிறப்பான அறிக்கைகளையும் அளிக்கின்றார். ஒன்றில் அமெரிக்க நாட்டின் கொள்கைகளின் விளக்கம் இருக்கும். மற்றொன்றில் பொருளாதார அறிக்கை காணப்படும்.

அமெரிக்காவில் திட்டமிடுகின்ற பணத்தை நிர்வாகத் துறைகளுக்கு வழங்கவும், அரசின் வருவாய்களைப் பெறவும், கணக்குகளைத் தணிக்கை செய்யவும் தனி முறைகளையும், தேவையான அமைப்புகளையும் உருவாக்கியுள்ளனர். நாடாளுமன்றத்தின் ஒப்புதலின்றி ஆட்சித் தலைவர் அரசின் செலவைக் கூட்ட முடியாது. ஒவ்வொன்றிற்கும் விரிவான சட்டதிட்டங்கள் உள்ளன.

**இங்கிலாந்து :** இங்கிலாந்தில் பெயரளவில் மன்னராட்சி இருக்கின்றது. ஆனால், அங்குள்ள நடைமுறைகள் எல்லாம் மக்களாட்சியின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன.

1914ஆம் ஆண்டு வரை இங்கிலாந்தின் வரவு - செலவுத் திட்டம் மிகவும் எளிமையான முறையில்

சிறிய அளவிலேயே இருந்தது. முதல் உலகப்போருக்குப் பிறகு அதனுடைய வரவு - செலவுத் திட்டத்தின் அளவு மிகவும் பெரிதாகியுள்ளது.

இங்கிலாந்தின் வரவு - செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் உருவாக்கிப் பொது மன்றத்தில் (House of Commons) அளிக்கின்றார். வரவு - செலவுத் திட்டத்தை வழங்குவதற்கு முன்னால் நிதியமைச்சர் ஆற்றுகின்ற உரை மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். அந்த உரையில் சென்ற ஆண்டின் வரவு - செலவுக் குறிப்புகளும், புதிய ஆண்டில் எதிர்பார்க்கும் வரவுகளும், செலவுகளும், வரி முறையில் கொண்டுவரப் போகின்ற மாற்றங்களும், நாட்டின் பொருளாதார நிலை பற்றிய அறிக்கையும், பிறவும் இடம் பெற்றிருக்கும். நிதியமைச்சரின் வரவு - செலவுத் திட்டச் சொற்பொழிவு பாராளுமன்றத்தின் விவாதங்களுக்கு அடிப்படையாக அமைகின்றது.

இங்கிலாந்தின் நாடாளுமன்றம் நிதியமைச்சர் அளிக்கும் வரவு - செலவுத் திட்டத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளலாம்; அல்லது குறைக்கலாம்; அல்லது அப்படியே ஒதுக்கிவிடலாம். ஆனால், அதனைக் கூட்டுகின்ற உரிமை நாடாளுமன்றத்திற்கு இல்லை. நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டபடி வரவு - செலவுத் திட்டம் செயல்படுகின்றது.

தேவைகள் ஏற்படுகின்ற பொழுது ஆண்டின் இடைக்காலத்தில் ஒரு துணை வரவு - செலவுத் திட்டத்தைக் கொண்டு வந்து வரி முறையிலும் பிறவற்றிலும் நிதியமைச்சர் வேண்டிய மாற்றத்தைச் செய்கின்றார்.

**பொதுவுடைமை நாடுகள்:** சோவியத் உருசியா போன்ற பொதுவுடைமை நாடுகளும் வரவு - செலவுத் திட்டத்தைத் தீட்டிக்கொண்டு செயல்படுகின்றன. ஆனால், அவற்றின் வரவு - செலவுத் திட்டம் முதலாளித்துவ நாடுகளின் வரவு - செலவுத் திட்டங்களிலிருந்து பெரிதும் மாறுபடுகின்றன.

பொதுவுடைமை நாடுகளில் எல்லாப் பொருளாதாரத் துறைகளும் அரசின் முழுக்கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றன. தனியார் துறையின் பங்கு மிகவும் குறைவாகும். இதனால் அரசு தனக்கு வேண்டிய வருவாயை எளிதாகப் பெறுகின்றது. ஓரே கட்சியின் ஆட்சியில் நாடு இருப்பதால், கட்சியின் கண்ணோட்டத்தின்படியே வரவு - செலவுத் திட்டம் தீட்டி, எதிர்ப்புகளின்றிச் செயல்படுத்தப் பெறுகின்றது. பொதுவுடைமைக் குறிக்கோளை விரைவில் அடையும் நோக்கில் செலவுகள் மேற்கொள்ளப் பெறுகின்றன.

பொதுவுடைமை நாடுகளின் வரவு - செலவுத் திட்டம் அரசுக்கு வழிகாட்டியாக இருக்கின்றது.

**பொதுவான போக்குகள்:** உலக நாடுகளின் வரவு - செலவுத் திட்டங்களை ஊன்றிக் கவனித்தால் சில பொதுவான போக்குகளைக் காணலாம்.

எல்லா நாடுகளின் வரவுகளும், செலவுகளும் விரைந்து வளர்ந்து வருகின்றன. அரசுகள் பொருளாதாரப் பணிகளில் நேரடியாக ஈடுபடுகின்றன. மக்களின் நலனைப் பெருக்குவதில் கவனம் செலுத்துகின்றனர்.

அரசுகளின் வருவாயில் பெரும்பகுதி படைகளை வைத்துக்கொள்ளவும், படைக்கலங்களை உருவாக்கவும் செலவிடப்படுகின்றது. தற்காப்பு நடவடிக்கைச் செலவுகள் ஆண்டுதோறும் கூடுகின்றன.

பெரும்பாலான நாடுகளில் பற்றுக்குறை நிதியாக்கத்தின் விளைவாகப் பணவீக்கம் தோன்றியுள்ளது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த அரசுகள் நடவடிக்கைகள் எடுக்கின்றன.

## 9 வரவு - செலவுத் திட்டமும் வளர்ச்சியும்

தெய்வப் புலவர் திருவள்ளுவர், ஒருவரின் செயல் திறனுக்கு அடிப்படையாக அவரது எண்ணமும் எண்ணியதை முடிக்கும் ஆற்றலும் இருப்பதனைச் சுட்டிக்காட்டுகின்றார். இதனை,

> "எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்"

என்ற குறளில் பார்க்கின்றோம். இங்கு "எண்ணம்" என்பது வெறும் நினைவோட்டத்தைக் குறிப்பிடவில்லை. ஒரு செயலை எப்படிச் செய்ய வேண்டுமென்பதை எண்ணித் திட்டமிடுதலையே கூறுகின்றது. இந்தத் திட்டமிடும் எண்ணம்தான் நிதித்துறையில் வரவு - செலவுத் திட்டமாக உருவெடுத்திருக்கின்றது.

**திட்டமும் வளர்ச்சியும்:** எந்தச் செயலையும் திட்டமிட்டுச் செய்கின்ற பொழுது வளர்ச்சி விரைவாகவும் வேண்டுகின்ற முறையிலும் நடைபெறுகின்றது. திட்டமின்றிச் செயல்படுகின்ற பொழுது தெளிவற்ற நிலை உருவாகிக் குழப்பம் ஏற்படலாம்.

அளவோடு (Limited) எவை எல்லாம் கிடைக்கின்றனவோ அவற்றை எல்லாம் திட்டமிட்டுப் பயன்படுத்துவது இன்றியமையாத் தேவையாகின்றது. இதனை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். நல்ல தண்ணீர் தட்டுப்பாடின்றி எல்லா நேரமும்

எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கின்றதென்று வைத்துக் கொள்வோம். அதனைப் பயன்படுத்துவதைப் பற்றி எண்ணிப் பார்க்கவோ, திட்டமிடவோ வேண்டிய தில்லை. எப்படியும் பயன்படுத்தலாம். ஆனால், ஒரு நாளைக்கு ஒரு வீட்டிற்கு இரண்டு குடம் தண்ணீர்தான் கிடைக்கின்றதென்று வைத்துக்கொள்வோம். அந்தத் தண்ணீரை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று எண்ணிப்பார்ப்பது தேவையாகின்றது.

தனிமனிதர்களுக்கோ, அரசுக்கோ எவ்வளவு செலவிருந்தாலும் அவ்வளவுக்கும் பணம் வருமானால் வரவு - செலவுத் திட்டம் தேவையில்லை. ஆனால், நடைமுறையில் பண வரவு அளவோடிருப்பதால் செலவு களுக்குத் திட்டமிட வேண்டிய தேவை வருகின்றது. செலவுகளை ஒட்டி வரவுகளையும் முறைப்படுத்தவேண் டியதிருக்கின்றது.

வாழ்க்கையில் முன்னேற எண்ணுகின்ற தனி மனிதர்களும் அரசும் தங்களுடைய நோக்கங்களை நிறை வேற்றிக்கொள்ள வரவு - செலவுத் திட்டம் தீட்டுவது தேவையாகின்றது. வரவு - செலவுத் திட்டம் தீட்டி உறுதிப்பாட்டுடன் செயல்படுத்தினால் முன்னேற்றம் ஏற்படும்.

**அடிப்படை:** வரவு - செலவுத் திட்டம் இயற்றப் பட்டு, செயல்படுத்தும் முறையினால் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றது.

சரியான முறையில் வரவு - செலவுத் திட்டம் தீட்ட, தக்கமுறையில் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டும். கடந்த ஆண்டின் கணக்குகளின் அடிப்

படையில்தான் புதிய ஆண்டின் திட்டம் அமைகின்றது. கடந்த ஆண்டு கணக்கு ஆராய்ந்து, தேவையற்ற செலவுகளைக் குறைக்கவும், பயனுள்ள செலவுகளைப் பெருக்கவும், வளரத்தக்க வருவாய்களை இனங்கண்டு கூட்டவும் வழிகாட்டுவதே வரவு - செலவுத் திட்டமாகும்.

வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துத் தருகின்ற செலவினங்கள் தேவையானவையாகும். அவற்றைப் பெருக்குவதால் நல்ல விளைவுகளே ஏற்படும். எடுத்துக் காட்டாக ஒருவர் திரைப்படம் பார்க்க ஓராண்டில் நிறையப் பணம் செலவிட்டிருந்தால் அடுத்த ஆண்டில் அதனைக் குறைக்கத் திட்டமிட வேண்டும். அறிவு வளர்ச்சிக்கான நூல்கள் வாங்குவதற்குச் செலவிடும் பணத்தை ஆண்டுக்கு ஆண்டு கூட்டலாம். ஏனென்றால், அறிவு வளரத் திறமை கூடும். திறமை பெருக வருவாய் மிகுதிப்படும். ஆதலால் இப்படிப்பட்ட செலவை வளர்ச்சிக்கான முதலீடாகக் கருதலாம்.

ஒரு நாட்டின் வரவு - செலவுத் திட்டத்தில் பொருளாதார வளர்ச்சிக்குரிய அடித்தளத்தை அமைக்க நிறையப் பணத்தைச் செலவிட வேண்டியதிருக்கின்றது. சான்றாக, ஒரு நாடு தொழில் வளர்ச்சிபெற விரும்புகின்றதென்று வைத்துக்கொள்வோம். அதற்கான களத்தை உருவாக்கப் பல முன்னோடி நடவடிக்கைகள் தேவை. தொழில் நுணுக்கக் கல்வியை வளர்க்கவேண்டும். தேவையானால் திறமையானவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிப் பயிற்சியளிக்க வேண்டும். மூலப் பொருள்கள் கிடைக்கும் இடங்களைப் பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரிக்க வேண்டும். தொழில்

களைத் தொடங்க முன் வருபவர்களுக்கு மான்யம் வழங்கியும் கடன் வழங்கியும் உதவ வேண்டும். இவை போன்ற பலவற்றிற்குச் செலவிட்டால்தான் நாட்டின் பொருளாதாரம் விருப்புகின்ற முறையில் வளரும். இவற்றிற்கு எப்படிச் செலவிடுவதென்பதை வகுத்துத் தருவது வரவு - செலவுத் திட்டமாகும்.

**நமது நாட்டின் நிலை:** நீண்ட காலமாக ஆங்கிலேயரின் ஆட்சியில் அல்லற்பட்டுக் கொண்டிருந்த நாடு நமது நாடாகும். நாடு விடுதலை பெற்ற பிறகு நாம் முழு மூச்சோடு வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். நமது நாட்டின் இன்றைய நிலையை அறிந்துகொண்டால், அரசு, மேலும் முனைப்பாக வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட வேண்டிய தேவையை உணர்வோம்.

நமது நாடு மிகுந்த மக்கள் தொகையைக் கொண்ட நாடு. 1971ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 55 கோடி மக்கள் இங்கு வாழ்கின்றனர். மக்கள் தொகையின் அடிப்படையில் உலகத்திலேயே இரண்டாவது (சீனாவுக்கு அடுத்து) பெரிய நாடு நமது நாடு. இந்த மக்கள் தொகை வேகமாக வளர்கின்றது. இவ்வளவு பேருக்கும் வேண்டியன கிடைக்கச் செய்வது அரசின் பொறுப்பாக இருக்கின்றது.

நமது நாட்டில் நூற்றுக்கு முப்பது பேர்தாம் படித்தவர்கள். பெரும்பாலானவர்களுக்குக் கல்வியறிவு வழங்க வேண்டும்.

இந்தியாவில் சிற்றூர்களே மிகுதி. 100க்கு 80பேர் சிற்றூர்களில் வாழ்கின்றனர். நமது நாட்டிலுள்ள

5,75,936 சிற்றூர்களில் 4,03,521 ஊர்களுக்கு மட்டுமே மின்வசதி கிடைத்திருக்கின்றது. மேலும் 1,72,415 சிற்றூர்களுக்கு மின்வசதி வழங்க வேண்டும்.

இங்குப் பெரும்பாலான மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கின்றனர். தொழில்கள் இப்பொழுதுதான் வளர்கின்றன. பெரும்பாலான மக்கள் வறுமையில் வாடுகின்றனர். ஏறத்தாழ 40% மக்கள் வறுமை வட்டத்திற்குள் இருக்கின்றனர். வேலையில்லாத் திண்டாட்டம் வளர்கின்றது. வளர்ச்சிபெற்ற நாடுகளோடு ஒப்பிட்டால் நம் மக்களின் வருவாயும் வாழ்க்கைத் தரமும் மிகவும் குறைவாக இருப்பதனைப் பார்க்கலாம்.

நமது நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு, மக்களின் வாழ்க்கையில் வளத்தைக் காண அரசு பல பணிகளை மேற்கொள்கின்றது. இந்திய அரசின் வரவு - செலவுத் திட்டம் இந்தப் பின்புலத்தில் அமைவதால் வளர்ச்சியை மையமாகக் கொண்டிருக்கின்றது. இதனை முன்பே கண்டோம்.

**ஒளி படைத்த எதிர்காலம் :** ஒவ்வொரு நாடும் ஒளி படைத்த எதிர்காலத்தைக் காண விழைகின்றது. நிகழ் காலத்தில் போடுகின்ற விதைதான் முளைத்து எதிர் காலத்தில் பலன் தரும். அதுபோல எதிர்காலத்தில் நாடு எப்படி அமையவேண்டுமென்று விரும்புகின்றீர்களோ அதற்கான பணிகளை இன்றே தொடங்க வேண்டும். இப்படித் தொடங்க வாய்ப்பளிப்பதுதான் அரசின் வரவு - செலவுத் திட்டம்.

அரசின் வரவு - செலவுத் திட்டம் ஓர் அருமையான, நுண்ணிய கருவியாகும். அதனைத் திறமையாகப் பயன்படுத்தினால் ஒவ்வொரு நாடும் முன்னேறும். நாடுகள் முன்னேறுகின்றபொழுது உலகம் முன்னேறும். எல்லா மக்களும் இன்புற்று வாழும் நிலை ஏற்படும்.

முற்றிற்று.